www.padippakam.com


# புதிய பூமி

PUTHIYAPOOMI | புதிய பூமி

சுற்று 1 | செப்டெம்பர் 1994 | விலை ரூபா 7/= | சுழற்சி 4


## ஜனநாயகத்தின் விலை

பொதுத் தேர்தலை நடத்துவதற்காக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 40 கோடி ரூபாய்களுக்கு அதிகமாகும். அதில் தேர்தலை கண்காணிக்க இங்கு வந்த சர்வதேச கண்காணிப்பு குழுவிற்காக செலவழிக்கப்பட்ட தொகை 10 கோடி ரூபாய்களுக்கு அதிகமாகும். ஜனநாயகத்தை மீட்பதற்கான தேர்தலுக்காக மட்டுமன்றி ஜனநாயகமாக தேர்தல் நடைபெற்றதா என்று கண்காணிக்கவும் செலவு செய்ய வேண்டியளவிற்கு ஜனநாயகத்தின் விலை உயர்ந்துவிட்டது.

### வடக்கு-கிழக்கில்

# இடைக்கால நிர்வாக சபை?

**வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிகிறது. வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பது பற்றி பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சும் ஆராய்ந்து வருவதாகவும் உத்தியோகபூர்வமற்ற விதத்தில் அறிய முடிகின்றது.**

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விடுத்துள்ள அழைப்பு ஏற்கப்பட்டு அரசாங்க-புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படலாம் என்று எல்லாத் தரப்புகளிலும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்டு இறுதியான முடிவு காணப்படும் வரை வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையை மீண்டும் இயக்க வேண்டுமென்று சில தமிழர் கட்சிகளால் பிரதமரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

பேச்சுவார்த்தையில் இறுதி முடிவு காண்பதற்கு முன்பு வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட முடியாதாகையாலும், த்ற்போது நிர்வாக அதிகாரங்களால் கிழக்கிலும் வன்னியிலும் நடத்தப்படும் நிர்வாகம் பூரண திருப்தி தரக்கூடியனவாக இல்லாதபடியாலும் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைத்து அதனிடம் வடக்கு கிழக்கு நிர்வாகம் ஒப்படைக்கப்படலாம்.

இனப்பிரச்சினை தீர்வுக்காக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் போது இடைக்கால நிர்வாக சபையை எவ்வாறு அமைப்பது அதன் உறுப்பினர்களாக யார் யார் நியமிக்கப்பட வேண்டியவர்கள், அவர்களின் அதிகாரங்கள், பொறுப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி முடிவெடுக்கப்படும் என்று தெரிய வருகிறது.

இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பிரதமரை சந்தித்த தமிழ்க் கட்சிகள் சில கோரிக்கையை விடுத்துள்ளன. இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் விருப்பத்தின்படி நியமிக்கப்பட்டாலும், தங்களுக்கு ஆட்சேபனை அல்ல அந்த சில கட்சிகள் தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

எனவே இடைக்கால நிர்வாக சபையை அமைக்க அரசாங்கம் விருப்பம் கொண்டிருப்பதுடன் இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர்களை நியமிப்பதிலும் சிக்கல் ஏற்படாது என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

புலிகள் இயக்கம் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என்று அறிவிக்க வேண்டும் அதனையே நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது பற்றிப் பொது நிர்வாக அமைச்சு வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில் உறுதியாக எதனையும் இப்போது கூறமுடியாதெனினும் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட மாட்டாது என்று கூறுவதற்கில்லை என்று கூறின.

பேச்சு வார்த்தைக்கான சம்மதத்தைப் புலிகள் இயக்கம் தெரிவித்தவுடன் பொருளாதாரத் தடையை நீக்கவும், யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளவும் வடக்கு - கொழும்புப் போக்குவரத்தை ஏற்படுத்தவும் அரசாங்கம் தயாராக இருப்பதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை ஏற்கனவே கூறியிருந்தமை தெரிந்ததே.

இச் செய்தி அச்சுக்குப் போவதற்கு முன்பு இது தொடர்பாகப் புலிகள் தரப்பிலிருந்து எவ்வித பதிலும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இது பற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்ட போதும் திட்டவட்டமாக எதையும் தெரிவிக்க முடியாத நிலையே இருக்கின்றது.

### பேச்சுவார்த்தைக்குப் புலிகளின் பதில்!

"பேச்சுவார்த்தைக்குவரும்படி அரசாங்கம் புலிகளுக்கு உத்தியோகபூர்வமான அழைப்பை விடுக்கவில்லை. உத்தியோகபூர்வமாக அறிவித்தால் புலிகளும் அவர்களது விருப்பத்தை உத்தியோகபூர்வமாக அரசாங்கத்திற்கு அறிவிப்பர். அவர்கள் செய்தியாளர்கள் மாநாடுகள் மூலம் எமக்கு அழைப்பை விடுக்கின்றனர். நாமும் செய்தியாளர்கள் மூலம் பேச்சுவார்த்தையில் ஈடுபடத்தயார் என்பதை அறிவித்து வருகிறோம்" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ள சில விடயங்கள் பின்வருமாறு: பேச்சுவார்த்தை யாழ்ப்பாணத்திலேயே நடைபெற வேண்டும். பிரதமர் சந்திரிகா அல்லது வேறு அரசாங்க பிரதிநிதிகள் இங்குபேச்சுவார்த்தை நடத்த வந்தால் நாம் அவர்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்குவோம். புலிகள் கொழும்புக்கு சென்றால் அரசாங்கம் புலிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. ஆகவே, யாழ்ப்பாணத்திலேயே பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# மீண்டும் ஒரு பொதுத் தேர்தல்?

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடைபெறலாமென்று பரவலாகப் பேசப்படுகின்றது.

பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கத்திற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பலத்தை ஏற்படுத்தும் நோக்கில் அப்பொதுத் தேர்தல் , நடைபெறலாம்.

எதிர்வரும் நொவம்பர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொ. ஜ. ஐ. முன்னணி பெரும்பான்மை வாக்குகளைப் பெற அக்கறை கொண்டுள்ளது. அப்படிப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத் தேர்தலை நடத்தினால் மூன்றில் இரண்டு பலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படின் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை நடத்துவது பற்றி பொதுஜன ஐக்கிய முன்னணி அர்சாங்கத்தினர் ஆராய்ந்து வருகின்றனர்.

பொ. ஜ. ஐ. முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்துள்ள பல வாக்குறுதிகளையும் நிறைவேற்ற சட்டமூலங்களை நிறைவேற்ற வேண்டும். அதில் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது, இனப் பிரச்சினையைத் தீர்க்க வடக்குக் கிழக்கில் புதிய நிர்வாகப் பிரிவை ஏற்படுத்துவது போன்ற பிரதான விடயங்களைப் பற்றிய சட்ட மூலங்களை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகும்.

தற்போதைய அரசியலமைப் பின்படி இனப்பிரச்சினைத் தீர்வு உட்பட சில விடயங்களுக்குப் பொதுசன உட்பட அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென உயர் நீதி மன்றம் பணிப்புரைகளை வழங்க முடியும். அந்த விடயங்களில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்புகளை நடத்த வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்படலாம். அதனால் பாரிய செலவுகளும் ஏற்படும்.

எனவே பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்த ஏற்பாடு கொண்டுள்ள இந்த அரசியல் அமைப்பையும் மாற்ற வேண்டிய தேவையும் இருக்கின்றது. இன்னும் 30,40கோடி ரூபாய்களை செலவழித்தாவது பொதுத் தேர்தலை நடத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெற்று இந்த அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்ற அபிப்பிராயமும் அரசாங்கத்தினரிடம் மேலோங்கி உள்ளது.

ஜனாதிபதி முறையை ஒழிக்கவும் அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளை மாற்றவும் மட்டுமன்றி எதிர்காலத்தில் சட்டங்களை ஆக்கி நிறைவேற்றவும் மூன்றில் இரண்டு பலம் அவசியம். அடிப்படையில் பாரிய மாற்றங்களை செய்யப்போவதாக அறிவித்துள்ள பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் பலத்தைக் கொண்டிருப்பது அவசியம்.

தேர்தலுக்கு முன்பு எதிராக அல்லது நடுநிலையாக இருந்த கட்சிகளும் பொ. ஜ. ஐ. முன்னணிஅரசிற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளன. அதில் இ.தொ.கா, புளொட், த.வி. கூட்டணி என்பன குறிப்பிடத்தக்கன. அவர்களின் ஆதரவினையும் உரிய முறையில் பாராளுமன்றத்தில் திரட்டிக் கொள்ளத் தேவையிருக்கின்றது.

மேலும் வடக்குக் கிழக்கில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள சமாதான முயற்சியினால் கிடைக்கவுள்ள அம்மக்களின் ஆதரவையும் பாராளுமன்றத்திற்குள் பொ.ஜ.ஐ. முன்னணி பெற்றுக் கொள்ள வேண்டி உள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுமுகமாகப் பொதுத்தேர்தலை நடத்த வேண்டிய நிலையில் பொ.ஜ.ஐ.முன்னணி இருக்கின்றது.

இது இவ்வாறிருக்க அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் விரைவில் இன்னுமொரு பொதுத்தேர்தல் நடைபெறலாம் என்று பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்திருந்ததையும் யூ.என்.பி அரசாங்கத்தில் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த தயாரட்னவும் விரைவில் இன்னொரு பொதுத்தேர்தல் நடைபெறலாம் என்று கூட்டமொன்றில் பேசி இருந்தமையும் கவனிக்கத்தக்கனவாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# இராணுவச் சதிகள் முறியடிப்பு

-யுக்திய தகவல்

பொ.ஜ.ஐ.முன்னணிக்கு ப்ாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாதபடியால் யூ.என்.பியினர் தொடர்ந்தும் ஆட்சியிலிருக்க பல முயற்சிகளைமேற்கொண்டனர். தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளை யூ.என்.பி மேற்கொண்டது தெரிந்ததே. அதைவிட இரண்டு இராணுவ சதி முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொ.ஜ.ஐ. முன்னணி பதவியேற்பதற்கு முன்னர் அதனை பதவியேற்க விடாது தடுக்க மேற்படி இராணுவ சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யூ.என்.பியை தொடர்ந்தும் ஆட்சியிலமர்த்த யூ.என்.பி மேல் மட்டத்தினர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஆதரவாகவே ஆகஸ்ட் 17ஆம் திகதியும் 18,19 திகதிகளிலும் இராணுவ சதிகள் மேற்கொள்ளப்படவிருந்ததாக அறியமுடிகிறது.

இச்சதிகள் இராணுவ பொறியியல் பிரிவுக்கு பொறுப்பான லெப்டினட் எம்.ஆர். டபிள்யூ சொய்சா, மேஜர் ஜெனரல் லக்கி அல்கம , மேஜர் மல்லிகாராய்ச்சி, யாழ்ப்பாண இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பிரிகேடியர் சரத் பொன்சேகா, கேர்னல் காமினி குணசேகர என்போருடன் முன்னாள் இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்ன என்போருக்குத் தொடர்பிருந்தததாக அறிய முடிகிறது.

இச்சதித்திட்டத்தின்படி முதலில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்க இராணுவத்தளபதி ஜெரிசில்வா ஆகியோரை முடித்துக்கட்டி அப்பதவிகளில் வெற்றிடங்களை ஏற்படுத்துவதாகும். அதன் பின்னர் முன்னாள் தளபதி சிசில் வைத்தியரட்னவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவை இராணுவத் தளபதியாகவும் நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவ் வெற்றிடங்களுக்கு அவர்களை நியமிக்கும்படி ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவை யூ.என்.பி உயர்மட்டத்தினர் வற்புறுத்தி இருந்ததாகவும் தெரிகிறது.

அதேவேளை திருமதி சந்திரிகா குமாரணதுங்கவை கொலை செய்யவும் இராணுவ சதியின் முக்கிய விடயமாக இருந்ததாக அறிய முடிகிறது.

அச்சதிகள் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கடந்த ஆகஸ்ட் 17ஆம் திகதி நள்ளிரவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இராணுவ தளபதி ஆகியோருக்கு எதிராகசதி நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படவிருந்தது. அது பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குத் தெரிய வந்தாலும், சதியில் முக்கிய பங்கு வகிக்க இருந்த முன்னாள் இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்ன இந்தியாவில் இருந்து அன்று நாடு திரும்பாதபடியாலும் அம்முயற்சி கைவிடப்பட்டது.

இரண்டாவது சதி 18,19களில் மேற்கொள்ளப்படவிருந்தனவாம். இதுபற்றி லெப்டினன்ட் எம். ஆர். டபிள்யூ சொய்சாவின் வீட்டில் கலந்துரையாடல்கள் நடைபெற்றதாகவும் அறிய முடிகின்றது.

இம் முயற்சி பற்றி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்ஹவிற்குத் தெரிய வந்தவுடன் அவர் எடுத்த நடவடிக்கைகளால் அம்முயற்சியும் கைவிடப்பட்டது.

மேற்படி சதி பற்றி தெரிய வந்ததும் சதி முயற்சியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவை தவிர ஏனைய இராணுவ அதிகாரிகள் உடனடியாக கொழும்புக்கு வெளியில் சேவைக்காக அனுப்பப்பட்டனர். கேர்னல் தொரதெனிய பூனகரிக்கும் பிரிகேடியர் சரத் பொன்சேகா மீண்டும் யாழ்ப்பாணத்துக்கும், லெப்டினன்ட் சொய்சா மன்னாருக்கும் அனுப்பப்பட்டனர்.

தேர்தல் முடிந்தவுடன் யூ.என்.பிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற தமிழ் கட்சிகளின் உதவியை யூ.என்.பி. நாடியது தெரிந்தது. த.வி.கூட்டணியினது ஆதரவை பெறுவதில் கூடிய முயற்சிகள் எடுத்தும் கைகூடவில்லை.

மீண்டும் யூ.என்.பியை ஆட்சியிலமர்த்த அந்த நடவடிக்கைகளை காமினி திஸாநாயக்கவும், ரணில் விக்கிரமசிங்ஹவும் மேற்கொண்டனர். அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன வழங்கியுள்ளார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் யூ.என்.பி ஆட்சியமைத்தால் பாதுகாப்பு வழங்க முடியுமா என்று ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும், இராணுவ தளபதியையும் கேட்டிருந்தார். அவர்கள் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

அதற்குப் பிறகே உத்தேச இராணுவ சதிகளை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

இச்சதி முயற்சிகளை அடுத்து புதிய பிரதமர் இராணுவத்தில் நம்பிக்கை இழந்துள்ளார். இராணுவசதிகள்பற்றிதற்போது விசாரணைகள் மேற்கொள்ளபபடுகின்றன.

இவ்வளவையும் செய்துவிட்டுத்தான் சமாதான வழியில் ஆட்சிமாற்றம் நடைபெற்றதாகவும், யூ.என்.பி யின் ஜனநாயக மரபு பற்றி யூ.என்.பி. தலைவர்கள் பேசித் திரிகின்றனர். ○

## சுவையான ஆலோசனை

தேர்தல் முடிவடைந்த பின் ஒரு பிரபலமான யூ.என்.பி. சார்பு பௌத்த மதத் தலைவர் ஒரு வளர்ச்சியடைந்த ஆலோசனையைத் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் தேர்தல் பிரச்சாரங்கள் தொடர்பு சாதனங்கள் மூலமாகவே நடத்தப்படுகின்றன. மேடைகள் அமைத்து சுவரொட்டிகள் ஒட்டி பிரச்சாரங்களில் ஈடுபடுவதில்லை. அதேபோல நமது நாட்டிலும் எதிர்காலத்தில் தொடர்பு சாதனங்கள் மூலமாக தேர்தல் பிரச்சாரம் நடத்தக் கோருகிறார் அந்த வணக்கத்திற்குரியவர்.

அவரின் தகவலின்படி இலங்கையில் 35 இலட்சம் ரேடியோக்களும் 15 இலட்சம் தொலைக் காட்சிப் பெட்டிகளும் உள்ளனவாம். இந்தத் தகவல் சரியென வைத்துக்கொண்டு பார்ப்போம்.

கொழும்பில் எத்தனை ரேடியோக்கள் ரீவிக்கள் உள்ளன. நாட்டின் சகல கிராமங்களிலும் இவையுண்டா? சகல மக்களும் ரேடியோ கேட்க, ரீ.வி பார்க்கக் கூடிய சூழல் இருக்கா? அதுதான் போகட்டும் நடந்து முடிந்த தேர்தலின் போது றேடியோ, ரீவி, லேக்ஹவுஸ் பத்திரிகைகள் யூ.என்.பிக்கே பிரச்சாரம் செய்தது அதி வணக்கத்துக்குரியவருக்குத் தெரியாதா?

அதிக செலவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தேர்தலின் போது சகல அரசாங்க வாகனங்களையும் யூ.என்.பி பயன்படுத்தியது அவருக்குத் தெரியாதா? இதனால் ஏற்பட்ட செலவை அவர் கணக்கில் எ்டுக்கத் தவறியது ஏன்? இலங்கை வளர்ச்சியடையாத நா்டு மட்டுமல்ல ஒரு பின்தங்கிய நாடு என்பதையும் அவர் அறியாரா?

தொடர்பு சாதனங்கள் மூலம் தேர்தல் பிரச்சாரம் என்பது யூ.என்.பியை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தவே. தொடர்பு சாதனங்கள் வசதிபடைத்தவர்களின் கைகளிலேயே இருக்கின்றது என்பதும் சாதாரண மக்களின் பிரச்சினையைப் பற்றி அவற்றிற்கு அக்கறையில்லை என்பதையும் வசதிபடைத்த அந்த மதத்தின் தலைவர் அறிந்திருக்க நியாயம் இல்லைத்தான். ○

## அமைச்சுக்களில்;
# இரகசிய உல்லாச விடுதிகள்

யூ.என்.பி. காலத்தில் அமைச்சு காரியாலயங்களில் இரகசிய (ரெஸ்ட் கவுஸ்கள்) உல்லாச விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சொகுசான ஆடம்பரமான படுக்கை அறைகள், குளியல் அறைகள், உணவருந்தும், குடிக்கும் அறைகள் என்பன அதிகமான அமைச்சு காரியாலகட்டிடங்களில் இருந்துள்ளன. இவை அமைச்சர்கள், அதிகாரிகள் என்போரின் சுக போக லீலைகளுக்காக அமைக்கப்பட்டிருந்தன.

திட்ட அமுலாக்கல் அமைச்சினை பொறுப்பேற்ற பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க அங்கிருந்த இரகசிய உல்லாச விடுதிகளை உடனே அகற்றும்படி கட்டளையிட்டுள்ளார்.

மீன்பிடித்தொழில் அமைச்சிலிருந்து இரகசிய (ரெஸ்ட் கவுசை) உல்லாச விடுதியையும் கண்டறிந்து அமைச்சர் இந்திக குணவர்த்தன உடனடியாக அதனை அகற்றும்படி கட்டளையிட்டார். ○

## நீதிச்சேவை ஆணைக்குழு
# செயலாளர் தலைமறைவு

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயல்ாளர் லால் பீரிஸ் தலைமறைவாகியுள்ளதாக தெரிகிறது. அவர் கடந்த 24 ஆந் திகதி வெளிநாட்டிற்கு ஓடிவிட்டாராம்.

நீதிச் சேவையில் இடம்பெற்றுள்ள பல மோசடிகள் ஊழல்கள் அம்பலத்திற்கு வந்து விட்டால் தனது தலை தப்பாது என்ற பயத்தில் தலைமறைவாகி விட்டதாகத் தெரிகிறது.

சில நீதவான்களின் நியமனத்தில் இடம்பெற்றுள்ள மோசடி, நீதவான்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்காமல் மூடிமறைத்தமைக்கு இவர் காரணம் எனக் கூறப்படுகிறது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற பல லட்சக் கணக்காக நீதிமன்றப் பண மோசடியில் இவருக்கு சம்பந்தம் இருப்பதாகவும் சந்தேகிக்கப் படுகிறது.

யூ.என்.பி அரசாங்கம் தோல்வி அடைந்து விட்டதால் மேற்படி விடயங்கள் வெளியே தெரிய வரும் ஏன்பதரல் அவர் தலைமறைவாகி விட்டாராம்.

இவர் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸவின் தலையீட்டினால் நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டார். அப்பதவிக்கு மாவட்ட நீதிபதியொருவரே நியமிக்கப்பட வேண்டும் என்பது வழமை. லால் பீரிஸ் நீதவானாக நியமிக்கப்பட்டு இரண்டு மாதங்களில் மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டார். என்பது குறிப்பிடத்தக்கது. ○

## விண்ணப்பப் படிவம் 20/=

கொழும்பில் அதிஉத்தமரின் வாசலுக்கு முன்னால் பாஸ் போட் விண்ணப்பப்படிவம்20/= விற்கு விற்கப்பட்டு வருகின்றது. அதே உத்தமரின் வாசஸ்தலத்தின் கோடிப்புறத்தில் இருக்கும் குடிவரவு குடியகல்வுத் திணைக் களத்தில் தனிப்பட்டவர்கள் பாஸ்போட் விண்ணபபப் படிவத்திற்குச் சென்றால் அங்கு போய் பெரியவரைக் காண் இவரைக்காண் என்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம். ○

## ஜே.ஆரின்;
## கண்ணுக்கு இதமேது?

சில மாதங்களுக்கு முன் ஒரு ஓவியக் கண்காட்சி இடம்பெற்ற சமயம் அதன் பிரதம விருந்தினராகச் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன ''கலை தொடர்பாக ஒருவர் என்ன கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தாலும் அவை கண்ணுக்கு இதமாக இருக்க வேண்டும். இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் ஓவியங்களில் பெரும்பாலானவை கண்ணுக்கு இதமாக் இல்லை'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அவருக்கு ரயர்கள் மூலம் அரைவாசி எரியுண்டிருந்த சடலங்கள், எரிக்கப்பட்ட யாழ் நூல்நிலையம், கோர முகங்களுடன் மனிதர்கள் என்பன கண்ணுக்கு இதமாய் இருந்திருக்க முடியாது தான். ○

## பிரதமருக்குத்
# தமிழும் தெரிந்திருந்தால்...

புதிய பிரதமருக்குப் பல மொழிகளில் பரீட்சயம் உண்டு என்று புகழாரம் சூட்டப்படுகின்றது. அவருக்கு சிங்களம், ஆங்கிலம், ஹிந்தி, பிரெஞ்சு, ரஷ்யா ஆகிய மொழிகள் தெரியுமாம்.

எல்லா சிங்களத் தலைவர்களும் இப்படித்தான். தமிழ் மொழி மட்டும் தெரியாதவர்களாக இருந்து வருகின்றனர். சொந்த நாட்டில் இருக்கும் இன்னொரு இனத்தின் மொழியைப் படிப்பதில் அவர்கள் அக்கறை கொள்வதாக இல்லை. ஆனால் பெரும்பாலான சிறுபான்மையின அரசியல்வாதிகளுக்கு வேற்று நாட்டு மொழிகள் தெரியாவிட்டாலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் தெரியும் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க தமிழ் கெரில்லாக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப் போகும் எமது பிரதமருக்குத் தமிழும் தெரிந்திருந்தால் ஆரோக்கியமானதாக இருந்திருக்குமல்லவா? ○

## முஸ்லீம்கள் யாழ் வரலாம்

''முஸ்லீம் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து குடியேற விரும்பினால் அதற்கு விடுதலைப் புலிகள் முட்டுக்கட் டையாக இருக்க மாட்டார்கள். அவர்களை வரவேற்க புலிகள் இயக்கம் தயாராக உள்ளது.

இன்றைய நிலையில் முஸ்லீம்கள் மட்டும் அகதிகளாக இருக்கவில்லை என்பதை அமைச்சர் அஷ்ரப் தெரிந்து கொள்வது நல்லது. ஏனெனில் இங்கு தற்போது மக்கள் குடியிருப்புகளை சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ளது. இந்நிலையில் ஒரு பகுதி தமிழ் மக்கள் அகதிகளாகி இங்குள்ள முஸ்லீம் மக்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

எனவே அம் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்று குடியேறும் வரை முஸ்லீம்கள் இங்கு வந்து குடியேறுவதில் சிக்கல்கள் உள்ளன.

நாங்கள் வடக்கு-கிழக்கிலிருந்து உடனடியாக விலகுமாறு கேட்கவில்லை. அகதிகளான தமிழ் முஸ்லீம் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதே முக்கியம்'' என அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி

47, மூன்றாம் மாடி
கொழும்பு சென்றல் சுப்பர் மாக்கற் கொம்ளெக்ஸ்
கொழும்பு-11

## இதயசுத்தியையே வரலாறு வேண்டிநிற்கிறது

பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டால் வடக்குக் கிழக்கிற்கு எதிரான பொருளாதாரத் தடையை நீக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. யுத்த நிறுத்தை மேற்கொள்ளப் போவதாகவும், வடக்கிற்கான போக்குவரத்தை ஏற்படுத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது.

பேச்சு வார்த்தை தொடங்கிய பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதிலும் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிகிறது.

ஆக, பொ.ஐ.ஐ.முன்னணி அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் பேச்சு வார்த்தை எப்போது ஆரம்பமாகும் என்பதையே எல்லோரும் ஆவலாக எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இனப்பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு ஒன்றைக் காண்பதில் புதிய அரசாங்கம் இதயசுத்தியான அக்கறை கொண்டுள்ளதாகவே எல்லோரும் நம்புகின்றனர். அதேபோன்று புலிகள் இயக்கத்தினரும் அரசியல் தீர்வுக்கு எதிரானவர்கள் அல்லர் என்ற நம்பிக்கையும் இருக்கின்றது.

ஏனைய தமிழ்க்கட்சிகளும் கூட, அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதை வரவேற்பதுடன் புலிகள் இயக்கமும் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைக்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஓரிரு பேரினவாதக்கட்சிகளைத் தவிர பெரும்பான்மையான சிங்கள மக்களும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்கான ஆணையை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் என்ன செய்வது என்றும், அவர்களை இராணுவ ரீதியாக எவ்வாறு முறியடிப்பது என்றும் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் யோசிப்பதாக ஒரு சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. புலிகள் பேச்சு வார்த்தைக்கு வராவிட்டால் இராணுவ நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது, அவர்களைத் தாக்குவதற்கான அரசாங்கத்தின் இராணுவப் பலம் போன்ற விடயங்கள் பற்றியும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் கலந்துரையாடியதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இனப்பிரச்சினையைத் தீர்க்க புதிய பிரதமருக்கு பேரினவாதிகள் இடமளிக்க மாட்டார்கள் என்பதால் இப் பேச்சுவார்த்தையால் பயனேற்படும் என்று புலிகள் நம்பவில்லை என்றும், அதனால் அவர்கள் அவர்களது கெரில்லாப் படையைப் பலப்படுத்துவதாக ஒரு ஆங்கில வாரஇதழ் செய்தி வெளியிட்டிருந்தது.

திருமணம் செய்யப்போகும் ஒருவர் திருமணம் நடப்பதற்கு முன்பு விவாகரத்தைப் பற்றிப் பேசுவதில் நியாயம் ஏதும் இருக்கிறதா? குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் அவரின் திருமண முறிவுக்கான காரணம் எதுவுமே இல்லாமல் மறுமணம் செய்து கொள்வது பற்றி யோசிப்பது எப்படி முறையானதாக இருக்க முடியும்?

எத்தரப்பினரும் நாட்டு மக்களின் நலன் கருதி இதய சுத்தியுடன் உழைப்பதையே இன்றைய வரலாறு வேண்டி நிற்கிறது.

- ஆசிரியர் குழு

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள்

(நமது அரசியல் நிருபர்)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டதை அடுத்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

'வடக்கு கிழக்கு பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினையல்ல. அது இனப்பிரச்சினையே. அதற்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். போரை நிறுத்தி கூடிய அதிகாரங்களைக் கொண்ட, 'புதிய' நிர்வாகப் பிரிவை அமைத்து தமிழ் மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்படும். இதுபற்றிப் புலிகளுடன் பொ.ஜ.ஐ. முன்னணி பேசும்! என்று வெளிப்படையாக பிரசாரம் செய்துவந்த பொதுஜன ஐக்கிய முன்னணியால் ஆட்சியமைக்க முடிந்துள்ளது.

இரட்னபுரி மாவட்டத்தில் பொ.ஜ.ஐ. முன்னணியில் போட்டியிட்ட வாசுதேவ நாணயக்கார டி.என்.எல். தொலைக்காட்சி விவாதத்தில் உரையாற்றும் போது 'யுத்தத்தை நிறுத்துவதற்கான ஒரே வழி வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளை இணைத்து ஒரே நிர்வாகப் பிரிவை அமைப்பதாகும். தமிழ் மக்கள் இனவிகிதாரத்தை குறைக்கும் விதத்தில் வடக்கு கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள் எதனையும் செய்யக்கூடாது. இது பற்றி பொ.ஜ.ஐ முன்னணியுடன் ஒரு உடன்பாட்டிற்கு வரலாம்' என்று கூறியதை அடுத்து யூ.என்.பி, எம். ஈ.பி என்பன அவைகளது படுமோசமான இனவாத பிரசாரங்களை மேற்கொண்டன. பொ.ஜ.ஐ முன்னணிநாட்டை இரண்டாகப் பிரிக்கப் போகிற தென்றும் புலிக்கொடிக்குக் கீழேயே சிங்கக்கொடி பறக்கப் போகிறது என்றும் பிரசாரம் செய்தன.

பொது ஜன ஐக்கிய முன்னணியினர் கூட வாசுதேவ கூறிய கருத்தை அடித்துக் கூறாமல் தடுமாறினர். வடக்கையும் கிழக்கையும் இணைப்பதாக வாசுதேவ கூறியது அவரது சொந்தக் கருத்தே என்று கூறினர்.

அவர் மேலும் தனிப்பட இவ்வாறு கருத்துக்களை கூறினால் அவருக்கு எதிராக பொ.ஜ.ஐ. முன்னணி நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என்று அஸ்கிரிய பௌத்த பீடாதிபதியை சந்தித்த போது சந்திரிகா குமாரணதுங்க கூறினார். அதுமட்டுமல்ல மேற்படி கருத்தை தெரிவித்ததால் பெரும்பான்மை சிங்கள-மக்கள் பொ.ஜ.ஐ. முன்னணிக்கு வாக்களிக்க மாட்டார்கள்; பொ.ஜ.ஐ முன்னணிக்கிருந்த அலையை வாசுதேவ குழப்பிவிட்டார்; அவர் அவரது மாவட்டத்தில் வெல்லுவாரோ தெரியாது என்றெல்லாம் பொ.ஜ.ஐ. முன்னணி வட்டாரங்கள் அவற்றின் கோபத்தை வெளிப்படுத்தினர். சில தமிழ் புத்தி ஜீவிகள் கூட வாசுதேவ அவசரப்பட்டு விட்டார் என்றெல்லாம் கூறினர்.

ஆனால் முழுக்க முழுக்க சிங்களமக்கள் வாழுமிடங்களில் எல்லாம் பொ.ஜ.ஐ. முன்னணி வெற்றியீட்டியது. அத்துடன் இரட்னபுரி மாவட்டத்திலும் வென்றதுடன் வாசுதேவ நாணயக்காரவே அதிக கூடுதலான விருப்புரிமை வாக்குகளைப் பெற்றார்.

தமிழ் மக்களுக்கு அதிகயளவு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்ட பிரசாரங்களுக்கு சிங்கள மக்கள் அடிபணிந்து விடவில்லை. தமிழ் மக்களிற்கு உரிமைகள் வழங்கப்படுவதை சிங்கள மக்களில் பெரும்பாலானோர் எதிர்க்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இனவாதம் பேசிய அதேவேளை அரசியல் தீர்வு காண வேண்டும் என்று குறிப்பிட்ட போதும் யூ.என்.பி வெற்றி பெறவில்லை. அரசியல் தீர்வுக்கு எதிரான படுமோசமான இனவாதம் பேசிய எம்.ஈ.பி படுதோல்வியடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழர் பிரச்சினைக்கு குரல் எழுப்பப்போவதாக படுமோசமான தமிழ் இனவாதம் பேசி கொழும்பில் வாக்கு கேட்ட குமார் பொன்னம்பலத்தின் குழுவும் கூட தேறவில்லை.

வடக்கு கிழக்கில் இன்னமும் அரசிற்கு எதிராக ஆயதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகள் இயக்கமும் புதிய அரசுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட விருப்பம் கொண்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பிறகு லண்டன் பி.பி.சி க்கு கருத்து தெரிவித்த புலிகள் இயக்க லண்டன் பிரதிநிதி தாம் சந்திரிகா அரசுடன் பேசவிருப்பம் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார் (இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை).

''புலிகள் இயக்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு புதிய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், அவர்கள் பேச்சு வார்த்தைக்கு இணக்கம் தெரிவித்தால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசாங்கத்தினது உத்தேச தீர்வுத் திட்டத்தை அவர்களிடம் சமர்ப்பிக்கத் தயார். அத்துடன் யுத்த நிறுத்தம் மேற்கொள்ள ப்படும், வடக்கு கிழக்கு பொருளாதார தடையும் நீக்கப்படும்'' இவ்வாறு பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். புலிகளின் பதிலை எதிர்பார்த்திருக்கும் அரசாங்கம் தற்போதைக்கு பாரிய இராணுவ தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஆசனங்களைப் பெற்றுள்ள த.வி.கூட்டணி, புளொட், ஏன் ஈ.பி.டி.பி கூட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளன.

எனவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சூழ்நிலை நன்கு தாபிதமாகிவிட்டது. அரசியல் தீர்வுக்கான தீர்வுத் திட்டத்தை ஏற்படுத்துவதும், அதனை நடைமுறைப்படுத்துவதுமே இனிமேல் புதிய அரசாங்கத்திற்குள்ள பிரதான அதே வேளை சிக்கலான கடமைகளாக இருக்கும் . இந்த கடமைகளை மேற்கொள்வது பற்றி நேர்மையான வேலைத்திட்டமெதுவும் இல்லாவிடின், வாக்குறுதி அளித்தபடி பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் எத்தனை பேச்சுவார்த்தைகளை நடத்தினாலும் பயனேதும் விளையாது.

தமிழ் மக்கள் அனைவரும் புதிய அரசாங்கத்திடம் பெரிய எதிர்பார்ப்பை கொண்டுள்ளனர். புலிகள் இயக்கம் கூட எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளதாகவே தெரிகிறது. பதவிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளன. கடந்த 17 வருடங்களாக ஆண்ட யூ.என்.பி இனப் பிரச்சின்னயை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

ஒரு நாட்டை ஆளும் அரசாங்கமே நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைக் காணவேண்டிய பொறுப்பை கொண்டுள்ளது என்பது சர்வதேச நியதியாகும்.

அதனை ஏற்றுக்கொண்டு அரசாங்கமே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அரசாங்கமே தமிழ் மக்களுக்கும், போராடும் இயக்கத்திற்கும் நம்பிக்கையை (முதலில்) கொடுக்க வேண்டும்.

அந்த அடிப்படையில் புலிகள் இயக்கம் அரசாங்கத்துடன் பேச உத்தியோகபூர்வமான பதிலை கூறவில்லை என்று கூறிக்கொண்டிருக்காமல் உடனடியாக சில நடவடிக்கைகளை ஏற்படுத்த வேண்டும்.

அதாவது யுத்த நிறுத்த அறிவிப்பை செய்ய வேண்டும்; வடக்கு கிழக்கு மக்கள் மீதான பொருளாதாரத்தடையை நீக்க வேண்டும்; வடக்கிற்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டும்.

இவற்றை செய்வதன் மூலமே விடுதலைப் புலிகள் இயக்கத்தினை பேச்சுவார்த்தைக்கு ஈர்க்க

→ 11

படிப்பகம்

www.padippakam.com



முன்னொரு காலத்தில் திகமாக வாக்குகள் அளிக்கப்படும் மாவட்டமாக யாழ்ப்பாண மாவட்டம் விளங்கியது. கடந்த 16 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்ற தேர்தலில் 14யிரம் வாக்காளர்களே யாழ் ாவட்டத்தில் வாக்களித்துள்ளனர். (14 ஆயிரம் பரும் உண்மையாக வ ாக்களித்தனரா என்று தெரியாது) ஆனால் அங்கு பதிவு (சரியான முறையில் வாக்காளர்கள் அனைவரினதும் பெயர்களும் பதியப்பட்டனவா என்பதும் தெரியாது) செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 6லட்சத்துக்கு அதிகமாகும்.

1 4ஆயிரம் வாக்காளர்களில் 10048 வாக்குகளை பெற்ற E.P.D.P யின் சுயேட்சைக்குழு 9 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுள்ளது. 1300 வாக்குகளைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸிற்கு ஒரு ஆசனம் கிடைத்துள்ளது.

ஒரு தொ்குதியில் ஒரு விருப்பு வாக்கையும் பெறாத அல்லது ஒன்றை மட்டும் பெற்றவரும் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளார். 6லட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர் இருக்கும் ஒரு மாவட்டத்தில் இருந்து ஆகக்குறைந்தது 351 விருப்பு வாக்குகளைப் பெற்றவரும் யாழ் மாட்ட மக்களின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமைதியான நீதியான முறையில் தேர்தல் நடைபெற்றிருப்பின் ஒரு வேட்பாளர் ஆகக்குறைந்தது 40 ஆயிரம் வாக்குகளையாவது பெற்றிருக்க வேண்டும்.

ஒரு வேட்பாளருக்குரிய வாக்குகளை கூட பெறாமல் ஒரு குழுவிலிருந்து 9 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே யாழ் மாவட்டத்து மக்களின் பிரதிநிதிகள் என்று இவர்களை ஏற்றுக் கொள்வதெப்படி ? இவர்கள் எப்படி 6 லட்சம் வாக்காளர்களின் குரலாக ஒலிக்க முடியும் ?

இந்த லட்சணத்தில் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு புறமிருக்க, தங்களின் வெற்றியை குறித்து தாங்கள் இறுமாப்படையவில்லை என்று பத்திரிகை



களுக்கு அறிக்கைகள் வேறு விடப்பட்டுள்ளன.

யுத்தம் நடைபெறுமிடத்தில் இப்படித்தான் தேர்தல் நடத்தப்படும் என்பதினால்தான் அதிகமான கட்சிகள் வடக்கில் தேர்தல் நடத்தப்படுவதை கண்டித்தனர். E.P.D.Pதான் யூ.என்.பி யின் ஆணைக்கடங்கி

களது எதிர்காலம் பற்றிக் கவலை கொண்டே புதிய பிரதமர் சந்திரிகாவை பல வழிகளிலும் அணுக முயற்சி செய்து வருகின்றனர். கிறிஸ்தவ மதப பெரியார்கள், அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக தாம் அரசாங்கத்துடன் இணைய விருப்பம் கொண்டுள்ளதாக தெரிவித்து வருகின்றனராம்.

இந்த E.P.D.Pயின் அரசியல் பிரவேசம் பற்றி தெரியாமல் இருப்பது அறிவீனமே. இதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா E.P.R.L.F இலிருந்து விலகியோ விலக்கப்பட்டோ (இவரே

இன்னும் மர்மமாகவே இருக்கிறது. ஏனெனில் அவரை பிணையில் (ஜாமினில்) எடுப்பதே பெரிய கஸ்டமாக இருந்தது) பிறகு L.T.T.E இற்கு எதிராக இலங்கை இராணுவத்துடன் இணைந்து தீவுப்பகுதிகளில் E.P.D.P யினர் இயங்கினர். பின்னர் அங்கு நிலை கொண்டனர். (அரசாங்க மட்டத்திலும் ஏனைய மட்டத்திலும் நடைபெற்ற கொலைகளில் இவர்களுக்கு சம்பந்தம் இருக்கலாம் என்று எதிர்க்கட்சியினர் சந்தேகம் எழுப்பி வந்தனர்) பிரேமதாஸவுடன்

# ஊர்காவற்றுறையிலிருந்து

இராணுவத்துக்கு பொறுப்பாக இருந்தார்) இந்தியாவில் தனியாக இயங்கி வந்தார். அங்கு இடம் பெற்ற சில கொலைகள், ஆட்கடத்தல்களில் சம்பந்தப்பட்டதாக தமிழ்நாட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவர் சிறையிலிருக்கும் போது



நெருங்கிய உறவை கொண்டிருந்தனர்.

பிரேமதாஸ கொலை செய்யப்பட்ட பிறகு டி.பி. விஜேதுங்க அரசாங்கத்தில் ஏனைய தமிழ் குழுக்களின் செல்வாக்கு குறைந்த போதும் E.P.D.P க்கும்

எனவே வடக்கில் E.P.D.Pயை வெற்றி பெறச்செய்து அவர்களின் ஆதரவுடன் மீண்டும் ஆட்சியை அமைக்க யூ.என்.பி திட்டமிட்டிருந்தது.

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகும் E.P.D.P யினர் ஆயுதங்களுடனேயே தீவுப்பகுதிகளில் நடமாடினர். இலங்கை வானொலியில் அவர்கள் நடத்திய 'மக்களின் குரல் ' தொடர்ந்து தேர்தல் பிரசாரமாக ஒலித்தது. (தற்போது நிறுத்தப்பட்டு விட்டது).

ஏனைய கட்சிகள் யாழ் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரங்களை நடத்த முடியாதவாறு E.P.D.P நடந்து கொண்டதாக அறிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. தேர்தலை கண்காணிக்க இங்கு வந்திருந்த சர்வதேச அவதானிகள் குழுவினர் E.P.D.P யின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் பற்றி குற்றம் சாட்டியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வன்னி மாவட்டத்திலும், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் கூட ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெறுவதற்கான சூழல் இருக்கவில்லை: அம்மாவட்டங்களிலும் தமிழர் கட்சிகளின் நிலை கூட தமிழ் மக்களை பலவீனமான நிலைக்கே இட்டுச் சென்றுள்ளது.

யுத்த பூமியில் தேர்தலில் பங்கெடுத்ததன் மூலம் தேர்தலை

# ஜயவர்த்தனபுர வரை

நடந்தது என்றாலும் இந்த E.P.R.L.F தமிழ் தேசிய முன்னணி (சுயேட்சைக்குழு 2) முஸ்லிம் காங்கிஸிற்கும் ஆசை விட்டுப் போகவில்லை இப்போ குனிந்த தலையை நிமிர்த்த முடிகின்றதா?

யூ. என்.பி யை தொடர்ந்து ஆட்சியில் வைத்திருப்பதற்காக (முட்டுக்கொடுக்க வேண்டும் என்ற யூ.என்.பி யின் ஆவலை தீர்க்கவே E.P.D.P போட்டியிட்டது. ஆனால் யூ.என்.பி க்கு ஆட்சியமைக்க முடியாது போய் விடவே E.P.D.Pயினர் பொ.ஐ.ஐ. முன்னணியை வலம் வருகிறார்கள்.

ஆயுதங்களுடன் வாழும் அவர்

E.P.D.Pயிற்கு அங்கீகாரம் கோரி டக்ளசின் தந்தையார் தேர்தல் ஆணையாளருக்கு 1989 இல் விண்ணப்பித்திருந்தார். அவ் விண்ணப்பம் சாதகமாக பரிசீலிக்கப்படவில்லை. L.T.T.E இற்கும் பிரேமதாஸ அரசாங்கத்திற்கும் நடைபெற்ற பேச்சு வார்த்தை முறிவடைந்து 1990 மீண்டும் யுத்தம் ஏற்பட்டது. அவ்வேளையில் டக்ளஸின் தந்தையார் பிரேமதாஸவை நேரில் அணுகியதன் மூலம் E.P.D.P யிற்கு அங்கீகாரம் கிடைத்தது.

அங்கீகாரம் கிடைத்த பின்னரே டக்ளஸ் இலங்கைக்கு வந்தார். (அவர் எப்படி விடுதலையாகி இலங்கைக்கு வந்தார் என்பது

**எஸ். ஜெயரட்னம்**

டி.பிக்கும் நெருக்கமாகவே இருந்தது. வன்னியிலும் கிழக்கு மாகாண சபை தேர்தலிற்குப் பிறகு ஏனைய தமிழர் அமைப்புக்களுக்கும் யூ.என்.பி இடைவெளி அதிகரித்தது. அது E.P.D.P யை யூ.என்.பிக்கு மேலும் விசுவாசமான தமிழ் அமைப்பாக காட்டியது.

நடத்த உதவியவர்களும், போட்டியிட்டவர்களும், வெற்றி பெற்றவர்களும் தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டத்துக்கு ஏற்படுத்தியுள்ள களங்கம் இலகுவில் மறைந்து விடாது.

---

## யாழ். பல்கலைக்கழகத்தில்

# மாணவர் போராட்டம்

யாழ். நிருபர்

யாழ் பல்கலைக் கழகத்தில் ஆகஸ்ட் மாத முற்பகுதியில் வைத்திய பீட மாணவர்கள் ஒருவாரகால பகிஷ்கரிப்பை நடாத்தி தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொண்டனர். இந் நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழகத்தின் ஏனைய பீட மாணவர்களும் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கினர். இது பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்தது. இவ்வாறு மாணவர் எதிர்ப்பையும் கண்டனத்தையும் யாழ் பலகலைக்கழக நிர்வாகம் எதிர்கொள்வதற்கு அவர்களே உருவாக்கிய பிரச்சினையே காரணமாகும். அதுவே வட இலங்கை தனியார் மருத்துவ மாணவர்கள் நாற்பத்தியொன்பது பேரை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சேர்த்துக் கொள்வது என பல்கலைக்கழக மூதவை (செனட்) எடுத்த தீர்மானத்தின் எதிர்விளைவாகும். இதனை வைத்திய பீட மாணவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நிர்வாகத்திற்கும் வைத்திய மாணவர்களுக்கும் முறுகல் நிலை தோன்றி பகிஷ்கரிப்பாக மாற்றம் பெற்றது. இன்றும் அப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. தற்காலிகமாகப் பகிஷ்கரிப்பை நிறுத்தியுள்ள மாணவர்கள் போராட்டம் தொடரும் எனக் கூறி நிற்கின்றனர்.

பணம் பாதாளம் வரை செல்லக் கூடியது என்பது இன்றைய சமூக அமைப்புச் சூழலில் பொருந்தக் கூடியது. அதனை முன்னைய ஆட்சியான யூ.என்.பி கல்வித் துறையிலும் புகுத்திக் கொண்டது. சகலவற்றையும் தனியார் மயப்படுத்தி பணக்காரர்களுக்கு முதன்மை வழங்கியது போன்று உயர்கல்வித்துறையையும் தனியார் மயப்படுத்த முற்பட்டது. அதனைப் படிப்படியாகச் செய்யும் நோக்குடனேயே வடகொழும்பு தனியார் மருத்துவக் கல்லூரியை உருவாக்கியது. பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு உரிய தகமை பெற முடியாத பணக்காரர்களின் பிள்ளைகளுக்கு பணத்தின் மூலம் பட்டமும் பதவியும் தொழிலும் பெற்றுக் கொடுப்பதையே அது நோக்கமாகக் கொண்டிருந்தது. இதனை அன்று அனைத்து பல்கலைக்கழகங்களும் கல்வியாளர்களும் வன்மையாக எதிர்த்தனர்.

அத்தகைய சூழலிலேயே வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி வட்டுக்கோட்டை மூளாயில் தோற்றுவிக்கப்பட்டது. இங்கேயும் பணத்தின் மூலம் (அன்று இரண்டு லட்சம் இருப்பின் குறைந்த தகமைகளுடன் அக்கல்லூரியில் இடம் பெறலாம் என்ற நிலை இருந்தது) மருத்துவக் கல்விக்கு விலை பேசப்பட்டது. அவ்வாறு சேர்க்கப்பட்ட மாணவர்களில் நாற்பத்தியொன்பது பேர்களை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைத்துக் கொள்வதற்கு நிர்வாகம் முடிவு செய்து கொண்டது. இதனாலேயே தற்போது வைத்திய பீட மாணவர்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் சர்ச்சையும் அதன் மூலம் பகிஷ்கரிப்பும் இடம்பெற வேண்டிய சூழலும் தோன்றியுள்ளது.

தரமுள்ள மாணவர்கள் தரப்படுத்தல் அல்லது புள்ளிகள் போதாமையால் பல்கலைக்கழக அனுமதி பெற முடியாது வெளியில் இருக்கும் போது பணம் படைத்த சிலர் தமது பிள்ளைகளைத் தனியார் மருத்துவக் கல்லூரியில் சேர்த்து இன்று பல்கலைக்கழகத்தினுள் கொண்டு வர முயற்சிக்கின்றனர் என்ற குற்றச் சாட்டினையே பல்கலைக்கழக வைத்திய பீட மாணவர்கள் முன் வைக்கின்றனர். அதேவேளை தனியார் மருத்துவ பீட மாணவர்கள் தம்மை மனிதாபிமான அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு கோருகின்றனர்.

இந்நிலையில் பிரச்சினை தொடர்ந்து கொண்டு செல்கிறது. உண்மையில் இவ்விடயத்தில் கண்டிக்கப்பட வேண்டியது பழைய ஆட்சியின் தவறான கல்விக் கொள்கையேயாகும்.

அவர்களது தேச விரோத மக்கள் விரோத நிலைப்பாட்டில் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கையின் பின் விளைவினையே இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தோன்றியுள்ள மாணவர் போராட்டத்தில் காணமுடிகிறது. இதனை முன் உணர்ந்தே அன்று யூ.என்.பி முன்வைத்த கல்வி வெள்ளை அறிக்கையினை சகல முற்போக்கு சக்திகளும் தீவிரமாக எதிர்த்து நின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே புதிய அரசியல் சூழலில் சரியான கல்விக் கொள்கை உருவாக்கப்படுவதன் அவசியத்தை யாழ். பல்கலைக்கழக வைத்திய பீட மாணவர்களின் போராட்டம் எதிர்நிலையில் வற்புறுத்தி நிற்பதை கல்வித்துறையினரும் கவனத்தில் கொள்வது அவசியம் என்பதே கவனத்திற்குரியதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# ஆட்சி மாற்றத்தை
# புலிகளும் விரும்பினர்



வடக்கிலிருந்து அ.பூபதி

இலங்கை பாராளுமன்றத்திற்கான பத்தாவது பொதுத்தேர்தல் மிகுந்த வன்முறைச்சம்பவங்கள் மத்தியில் நடைபெற்று முடிந்துள்ளது. அச்சுறுத்தல், அடாவடித்தனம், முறைகேடுகள் என்பவற்றுக்குப் பின்னால் ஆண்டு அனுபவித்து ருசி கண்ட ஐக்கிய தேசியக் கட்சி இருந்து வந்துள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. அது எப்படியும் அதிகாரத்திற்கு வந்துவிட வேண்டும் என்பதில் குறிப்பாக இருந்து வந்த போதிலும் ஐ. தே.கட்சியை அரங்கில் இருந்து அகற்றுவதில் மக்கள் உறுதியாக இருந்துள்ளனர் என்பதைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இத் தேர்தலில் தேசிய இனப் பிரச்சினை ஒரு முக்கிய விவாதப் பொருளாக இருந்து வந்தமை கவனத்திற்குரியதாகும். கடந்த பதினேழு வருட காலத்தின் இன யுத்தத்தை ஐ. தே. கட்சி நியாயப்படுத்தி நிற்பதுடன் எதிரணியினர் நாட்டைப் பிரித்து பிரபாகரனிடம் கொடுக்கப் போகிறார்கள் என்ற பேரினவாதப் பூச்சாண்டியையும் காட்டி நிற்கின்றனர். இதற்குப் பொதுஜனஐக்கிய முன்னணியும் அதன் பிரதித் தலைவியான சந்திரிகா குமாரணதுங்காவும் மிகத் தெளிவானதும் நிதானமானதுமான பதிலை மக்கள் முன்னால் வைத்தனர். பெரும்பான்மையான சிங்கள மக்கள் பேரினவாதக் கருத்துகளை நிராகரித்து பொதுசன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளுக்கு வாக்களித்துள்ளமை இத்தேர்தலில் சிறப்பான அம்சமாகும். காலத்திற்குக் காலம் பேரினவாதத்தை கிளப்பி வந்தவர்களினால் சிங்கள மக்கள் ஓரளவுக்கு சலனமடைந்து வந்துள்ளமை மறுப்பதற்குரியதொன்றல்ல. ஆனால் ஒட்டு மொத்தமாகக் கடந்த பதினேழு வருடகாலத்தின் பேரினவாத வழிப்போக்கில் ஏற்பட்ட அழிவுகளையும் நாசங்களையும் சிங்கள மக்கள் தக்்ந்த பட்டறிவாகக் கொண்டு விட்டனர் என்பதை இத்தேர்தலில் காணக்கூடியதாக இருந்தது. இதனாலேயே சோஷலிச வேடத்தைத் தாங்கிக் கொண்டு பேரினவாதத்தை முன்தள்ள முயன்று வந்த தினேஷ் குணவர்த்தனாவை சிங்கள மக்கள் ஒரே அடியில் முகங்குப்புற வீழ்த்தி விட்டார்கள். அவருக்கு ஆதரவும் அரவணைப்பும் கொடுத்து நின்ற 'ஜாதிக சிந்தனை' யாளர்களுக்கு முகத்தில் நல்ல அறை கிடைத்திருக்கிறது. இவற்றில் இருந்து பார்க்கும் போது இத்தேர்தலின் மூலம் பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஓர் மாற்று ஆட்சியையும் அதன் மூலம் ஓர் புதிய மார்க்கத்தையும் நாட்டில் காணத் தமது ஆணையை வழங்கி உள்ளமை தெளிவாகஉள்ளது. எனவே ஆட்சிக்கு வந்துள்ள பொது ஜன ஐக்கிய முன்னணி தம்மீது மக்கள் வைத்துள்ள மிகப் பெரிய நம்பிக்கையை ஒவ்வொரு துறையிலும் முனையிலும் பொறுப்புடனும் நிதானத்துடனும் முன்னெடுக்கும் கடமைக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

இத்தேர்தல் வடக்கு கிழக்கில் முழுமை பெற்றதாக இருக்கவில்லை என்பது கவனத்திற்குரிய மற்றொரு முக்கிய அம்சமாகும். கிழக்கிலும், வடக்கிலும் ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் அரை குறையாகவே தேர்தல் இடம் பெற்றது. இராணுவ கெடுபிடிகளுடனும், இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாத நிலையில் குறைந்தளவு வாக்குப் பதிவுகளுடன் தான் தேர்தல் நடாத்தப்பட்டது. குறிப்பாகத் யாழ் மாவட்டத் தேர்தல் என்பது விழுந்து விழுந்து சிரிக்கக் கூடிய வகையில் அமைந்திருந்தது. ஆளில்லா ஊருக்கு நானே அரசனாக முடிசூடி உள்ளேன் என்ற அறிவிப்புப் போலவே முடிவுகள் இருந்தது.

அதேவேளை வடக்கின் புலிகள் இயக்க கட்டுப்பாட்டில் உள்ள பெருநிலப்பரப்பில் தேர்தல் இடம்பெறவில்லை. இருப்பினும் நடந்து முடிந்த தேர்தலை வடக்கில் உள்ள மக்கள் மிக உன்னிப்பாக அவதானித்து வந்ததுடன் தமது மனநிலையை தங்களுக்குள் பரிமாறிக் கொண்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. கடந்த பதினேழு வருட காலத்தின் பேரினவாத ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி வீழ்த்தப்பட வேண்டும் என்பதில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஒரே கருத்து உள்ளவர்களாக இருந்தனர். வெளிநாட்டு சம்பாத்தியத்தில் அதிக அக்கறை கொண்ட ஒரு பகுதியினர், யுத்த சூழலால் பெருநிதி பெருக்கிக் கொண்ட வகுப்பினர், அந்நிய அடிவருடித்தனத்தைக் கொண்ட கசடுபடிந்த ஒரு சிலர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு மீண்டும் வரவேண்டும் என உள்ளூரப் பிரார்த்தித்துக் கொண்டனரே த்விர அதனை வெளிப்படையாகக் கூறத் தயாரில்லாத நிலையிலேயே காணப்பட்டனர். யார்வந்தாலும் நமக்கு ஒண்டுதான். பிரச்சினை பிரச்சினையாகத்தான் இருக்கப் போகிறது என்ற சலிப்புத்தனத்துடன் இருந்தவர்கள் கூட இறுதி நேரத்தில் பொது சன ஐக்கிய முன்னணியின் குறிப்பாக சந்திரிகாவின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டவர்களாகக் காணப்பட்டனர். எனவே பொது சன ஐக்கிய முன்னணி வெற்றி பெறுவதை வடக்கின் மக்கள் முழுமனதோடு விரும்பி நின்ற நிலையை பெரிதும் காணப் பட்டது. மக்களின் இம் மன நிலையை நிராகரிக்க முடியாது அங்கிருந்து வரும் பத்திரிகைகள் ஏதோ ஒரு வகையில் வெளிப் படுத்தி நின்றமையைக் காண முடிந்தது. அதேபோன்று வடக்கின் பெருநிலப் பகுதியைதான் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் புலிகள் இயக்கமும் பழைய ஆட்சி அகற்றப் படுவதையும் புதிய மாற்று ஆட்சி அரங்கில் தோன்றுவதையும் உள்ளூர விரும்பி நின்ற போக்கினையும் அவதா

வடக்கில் குறிப்பாக யுத்தம் முனைக்கட்டி நிற்கும் பிரதேசத்தின் மக்கள் பொதுஜனஐக்கிய முன்னணியினதும் சந்திரிகா குமாரணதுங்கவினதும் வெற்றியை ஆவலோடு எதிர் பார்த்திருந்தமைக்கு ஒரு முக்கிய காரணம் தற்போதைய யுத்த சூழல் மாற்றப்பட்டு சமாதான நிலை தோன்ற வேண்டும் என்பதற்காகவே ஆகும். சந்திரிகா கொடுத்திருந்த தேர்தல் வாக்குறுதிகளை வடபகுதி மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தமையை அவர்களது பேச்சுக்களில் இருந்து காண முடிந்தது. அதேவேளை டி.பி. விஜேதுங்காவின் பேரினவாதப் பேச்சுக்கள் மீது மக்கள் தமது ஆத்திரத்தை வெளிக்காட்டவும் செய்தனர். அத்துடன் வடக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீண்டும் வாக்களிப்பது உதைத்த காலை நக்கும் இழி நிலைக்குச் சமமானது என்றே பேசிக் கொண்டனர். சந்திரிகா ஒரு புதிய சிந்தனையை, புதிய பாதையினை மிகத் துணிச்சலுடன் சிங்கள மக்கள் மத்தியில் இனப்பிரச்சினை சார்பாக முன்வைத்து அதில் திறந்த மனத்துடன் தமது கருத்துக்களைக் கூறி வரும் வேளையில் வெளி மாகாணங்களில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் அதற்கு உறுதுணையாக இருந்து பொதுசன ஐக்கிய முன்னணிக்கே வாக்களிக்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தையே வடக்கின் மக்கள் தேர்தலின் போது கொண்டிருந்தனர். தொண்டமான் தனது வர்க்க விசுவாசத்திற்கு ஏற்பவும் கொழும்புத் தமிழரில் வசதித் தமிழரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கால்களைக் கட்டிப் பிடித்து நக்கி நிற்பது

குணம் மட்டுமல்லாது தமிழ் வர்க்கக் குணம் பொருந்தியது தான் என்பதையும் வடக்கில் உள்ள புத்திஜீவிகள் பேசிக் கொண்டதையும் கேட்க முடிந்தது.

இவ்வாறு நடந்து முடிந்த தேர்தலும் அதற்கு இடம் பெற்ற முன் தயாரிப்புகளும் வடக்கின் மக்கள் மத்தியில் பல்வேறு பிரதிபலிப்புக்களை ஏற் படுத்தியிருந்தன. ஒட்டு மொத்தத்தில் அங்குள்ள மக்கள் ஓர் புதிய அரசியல் சூழல் தோன்றுவதை பொதுசனஐக்கிய முன்னணியின் ஊடாக எதிர் பார்த்து நின்றனர். அதன் வெற்றி அவர்களது எதிர்பார்ப்பினை மேலும் நம்பிக்கை பெற வைத்துள்ளது. அந் நம்பிக்கையானது யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம், போக்குவரத்து சீராக்கல், புலிகள் இயக்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை, ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமான அரசியல் தீர்வு, இவற்றின் மூலம் தமது இயல்பு வாழ்வுக்கு திரும்புதல் போன்றவற்றினை வேகமான வழிகளில் பொதுசன ஐக்கிய முன்னணி செயலாக்கும் என்பதன் அடிப்படையைக் கொண்டிருந்தது. மேற்குறித்த நம்பிக்கை தனியே வடக்கு மக்களுக்குரியதொன்றல்ல. கிழக்கு மக்கள் உட்பட பாதிப்புகளுக்கு உள்ளான அனைத்து மக்களினதும் உள்ளார்ந்ததும் உடனடியானதுமான விருப்பமாகும். இதனைப் புதிய பிரதமரும் அவரது ஆட்சியும் கவனத்திற்கு எடுத்து வேகமாகச் செயல்படுவதையே வடக்கு கிழக்கின் மக்கள் விரும்புகிறார்கள். ○

## யாழ்ப்பாணத்தின் அவலநிலை

*யாழ். குடாநாட்டைச் சுற்றி கரையோரங்களையும், சிறுதீவுகளையும் அண்டிய பகுதிகளில் இராணுவ கடற்படைத் தளங்கள் பாரிய அளவில் இருந்து வருகின்றன. அங்கிருந்து நாளாந்தம் மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. இதனால் அன்றாடம் மக்கள் உயிரிழந்தும், படுகாயங்களடைந்தும் வருகின்றமை இயல்பு வாழ்க்கையின் ஓரம்சமாகி விட்டது. இவ்வாறு இடம்பெறும் கண்ணீர்க்கதைகளில் ஒன்றையே புதிய பூமியின் வடபகுதி நிருபர் எடுத்து அனுப்பியுள்ளார்: அச்சுவேலி முருகன் தேசிங்கம் (வயது50) என்பவர் கதறி அழுதவாறு தனது குடும்பத்திற்கு நேர்ந்த கதியைக் கூறியபோது கூடியிருந்த மக்கள் கண்ணீர் விட்டு நின்ற காட்சியைக் காணமுடிந்தது.*

*அவர் விபரித்ததாவது ''நேற்று (16.8.94) அதிகாலை 1.30இலிருந்து பலாலிப் பக்கத்திலிருந்து கடும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதால் நித்திரையின்றிப் பயப்பீதியுடன் கண்விழித்திருந்த நான் காலை 5.30 மணியளவில் மனைவியைத் தேனீர் தயாரிக்கச் சொல்லிவிட்டு காலைக் கடன்களை முடித்து அண்மையிலிருந்த கோவிலுக்குச் சென்று வணங்கிக் கொண்டு 6.30 மணியளவில் வீடு திரும்பினேன். வீட்டுக்கு வந்த நான் மனைவி பிள்ளைகளுடன் குசினியிலிருந்து தேனீர் அருந்திக் கொண்டிருந்தேன். அப்பொழுது வல்லைப் பக்கத்தில் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்த ஷெல்கள் நமது வீட்டுக்கு அண்மையாக விழத்தொடங்கின. அச்சமடைந்த நான் குடும்பத்தவரை பதுங்கு குழிக்குள் அழைத்துச் சென்று கொண்டிருந்தேன். முதலில் நானும் எனது இளைய மகளும் பதுங்குகுழிக்குள் இறங்கிக் கொண்டிருக்க எம்மைத் தொடர்ந்து மனைவியும் இரு பிள்ளைகளும் இறங்கத் தயாராகிக் கொண்டிருந்தனர். அடுத்த கணத்தில் பதுங்கு குழிக்கு அருகாக ஒரு ஷெல் பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. அடுத்த நிமிடத்தில் நான் வெளிவந்து பார்த்த பொழுது எனது மனைவியும் மூத்த மகனும் இரத்தம் பீரிட்டுப் பாய்ந்த நிலையில் பேச்சு மூச்சின்றிக் கிடந்தனர். இளைய மகன் ''அப்பா,அப்பா'' என முனகிக் கொண்டிருந்தான். அயலவர்களின் உதவியுடன் வாகனமொன்றில் எல்லோரையும் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். வழியில் இளைய மகன் எனது மடியில் உயிர்துறந்தான். மனைவியும் மூத்த மகனும் ஏற்கனவே உயிர்துறந்து விட்டனர். எனது கண்முன்னாலேயே மனைவி, மூத்த மகன், இளைய மகன் ஆகிய மூவரையும் இராணுவ ஷெல் தாக்குதலுக்குப் பலி கொடுத்து விட்டு நிற்கின்றேன்'' இவ்வாறு அழுதபடி தனது சோகக் கதையை விபரித்தார் அந்தக் குடும்பஸ்தர். இதுதான் இன்றைய யாழ்ப்பாணத்தின் அவல நிலை. இன்றிருப்பார் அடுத்த கணம் இருப்பார் என்பதற்கு எவ்வித நிட்சியமுமில்லாத கொடூரமான யுத்த சூழலில் வடக்கு கிழக்கு மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு பல நூறு உதாரணங்களில் இது*

படிப்பகம்

www.padippakam.com



# தலைநகரும் சீரழிவின் அறிமுகமும்

## ஒரு மேல் நோக்கு

-யசந்தி-

தலைநகரில் இன்று நாம் எங்கு பார்த்தாலும் வீடியோ கசட்களை வாடகைக்கு கொடுக்கும் நிலையங்களையே காணக் கூடியதாக உள்ளது. இதிலிருந்து தலைநகர மக்களின் சினிமா மோகத்தினை சுலபமாக அறிந்து கொள்ள முடியும்.

கடந்த மாதம் சமயதாபனம் ஒன்று தனது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. அக் கொண்டாட்ட வைபவத்திற்கு இந்தியாவில் இருந்து சிலர் அழைக்கப்பட்டனர். சமய தாபனம் என்றால் சமய அறிஞர்களைத்தானே அழைக்கும் என்று நீங்கள் நினைக்கலாம். அந்த நிலை மாறி விட்டது.

இன்று ஆன்மீக நிகழ்வுகளில் கூட கவர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. இதனால் ஆண்டு விழாக் கொண்டாடும் சமய தாபனமும் கவர்ச்சிமிக்கவர்களை அழைத்தில் தவறில்லையல்லவா?

இன்று ஒரு விழாவுக்கு பெருந்தொகையான மக்களை அழைப்பதற்கு சுலபமான ஒரு வழிதான் உண்டு. இந்திய நடிக நடிகையரை அழைத்தால் அவர்களைப் பார்ப்பதற்காகவே மக்கள் கூடுவார்கள். விழாவும் இனிது நிறைவுறும்

இன்று இந்த யுக்தியையே எல்லோரும் கைக்கொள்ளுகின்றார்கள். ஆலய கட்டிட நிதிக்குப் பணம் திரட்டுவதற்கு தென் இந்திய கவர்ச்சி நடிகைகள் அழைக்கப்படுகின்றார்கள். அவர்களை அழைத்து நடன நிகழ்ச்சிகளை நடத்தினால் வசூல் மிகவும் அதிகமாகும் என ஏற்பாட்டாளர்கள் நினைப்பதில் தவறில்லைத்தானே.

இலங்கை கலைஞர்கள் தரமான நிகழ்ச்சிகளை நடத்தினால் அந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு செல்லும் மக்கள் தொகை மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. நம் நாட்டு கலைஞர்களை ஊக்கப்படுத்த தென் இந்திய சினிமாக் கவர்ச்சி அவர்களை விடுவதில்லை.

இந்தியாவிலே ஒரு சினிமா நடிகைக்கு சுகயீனம் என்றால் அவரு [illegible] ரசிகர் தீக்குளித்துத் தற்கொலை செய்ய முயலுகின்ற சம்பவங்கள் சர்வ சாதாரணமாகி விட்டன. இலங்கையிலே தீக்குளித்த சம்பவம் நடைபெற்றதென்றால் அது சிங்கள நடிகர் விஜய குமாரணதுங்க கொலை செய்யப்பட்ட போதேயாகும். இது இலங்கை சிங்கள சினிமா வரலாற்றில் நடைபெற்ற முதற் சம்பவமாகும். விஜய குமார ரணதுங்க தனது அரசியல் நடவடிக்கை மூலமும் மக்களைக் கவர்ந்திருந்தமை இங்கு சுட்டிக் காட்டுதற்குரியது.

இலங்கைத் தலைநகரிலே தமிழக சினிமா நடிக நடிகையர் ரசிகர் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த நடிக நடிகையருக்கு கோவில்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இதயத்திலே சிலவேளை அவர்களுக்கு இலங்கை ரசிகர்கள் கோயில்கள் கட்டியிருக்கலாம். ஆனால், வெளிப்படையாக அவர்களுக்கு கோயில்கள் இருப்பதற்கான தகவல்கள் இல்லை.

ஆனால் தமிழ் நாட்டில் சில்க் சுமிதாவுக்கு ஒரு கோயில் பாலாபிசேகம் செய்து வந்தமை குறித்து தினத்தந்தி செய்தி வெளியிட்டிருந்தது.

அண்மையில் தமிழக கவர்ச்சித் தாரகை குஷ்புவுக்கு கோயில் அமைக்கப்பட்டிருக்கின்றது என்று செய்தி வெளியாகி இருக்கின்றது.

இந்த நிலை எமது நாட்டு ரசிகர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை. அதையிட்டு நாம் ஆறுதல் அடையலாம்.

தலைநகரில் இருந்து இரண்டு தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தனது வாரவெளியீட்டை வெளியிட்டு வருகின்றன. அவை கூட சினிமாவிற்குத் தனிப் பக்கத்தை



ஒதுக்கி கவர்ச்சிகரமான படங்களைப் பிரசுரித்து வாசகர்களை தம் பக்கம் இழுக்க முயல்கின்றன அவை வியாபார நோக்கத்திற்காக மலினமான சினிமாச் செய்திகளைப் பிரசுரிக்கின்றன.

நாம் மக்களுக்கு எப்படியான தகவல்களைக் கொடுக்கின்றோமோ; அதற்கு மக்கள் நாளடைவில் பழக்கப்பட்டு அதற்கு அடிமையாகி விடுவார்கள்.

பத்திரிகைத் துறையில் இருக்கின்றவர்கள் மக்களுக்கு பயன்மிக்க தகவல்களை கொடுக்க முன்வருகின்ற போது மக்களின் தவறான ரசனையையும் மாற்றியமைக்க முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தலைநகரில் இன்று ஆறு தொலைக்காட்சிச் சேவைகள் நடத்தப்படுகின்றன. இவ் ஆறு தொலைக்காட்சிச் சேவைகளில் நான்கு தொலைக்காட்சிச் சேவைகள் தமிழ்த் திரைப் படங்களைப் போட்டியிட்டு ஒளிபரப்பி வருகின்றன. இதனால் கல்வி பயிலுகின்ற இளம் சந்ததிகள் தவறான வழிக்குத் திசை திருப்பப்படுகின்ற நிலையினைக் காண முடிகின்றது.

தொலைக்காட்சி நிலையங்கள் படங்களை ஒளிபரப்பா விட்டால் வீடியோ கசட்டுகளை வாங்கிப் போட்டுப் பார்த்து மகிழலாம் தானே என்று நீங்கள் கேட்கலாம்.

தொலைக்காட்சிப் பெட்டிகள் எல்லா வீடுகளிலும் பெரும்பாலும் காணப்படுகின்றன. ஆனால் வீடியோ டெக்குகள் எல்லா வீடுகளிலும் இல்லை. இது ஒருபுறமிருக்க தொலைக்காட்சி நிலையங்கள் திரைப்பாடல்களை ஒளிபரப்புகின்ற பொழுது கட்டாயம் அவற்றைப் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

தொலைக்காட்சி நிலையங்கள் மலிவான விலையில் தமக்குக் கிடைக்கும் படங்களையே ஒளிபரப்பி வருகின்றன. இங்கே தரம் என்பது பேணப்படுவதில்லை. அத்துடன் தனியார் தொலைக்காட்சி நிலையங்கள் திரைப்படத்தை தணிக்கை முறைக்கும் உட்படுத்துவதில்லை. இதனால் குடும்பமாக இருந்து திரைப்படங்களைப் பார்க்க முடியாத நிலை உருவாகி விட்டது.

இப்பொழுது வெளிவருகின்ற திரைப்படங்கள் பாலியல், வன்முறை, கொலை, கொள்ளை போன்ற கதையம்சங்களுடன் தொடர்புடையவையாகவே காணப்படுகின்றன. இந்தப் பயங்கரவாத உணர்வுகள் இளஞ் சந்ததியினரிடையே விதைக்கப்படுகின்றன. இதன் தாக்கம் உடனடியாக தெரியா விட்டாலும் காலப் போக்கில் உணரக் கூடியதாக உள்ளது.

பிள்ளைகள் தாய் தந்தையரை, சகோதரர்களை மதியாத மனநிலை, சமூக இசைவாக்கம் இன்றி காணப்படும் நிலை, எடுத்ததற்கெல்லாம் வன்முறையை நாடுகின்ற நிலை உருவாகி வருகின்றது.

தமிழ்ச் சினிமா ஆரோக்கியமான சினிமாவாக இன்னும் மலரவில்லை. வியாபார சினிமா உலகம். யதார்த்தமான சினிமா உலகிற்கு நுழைபவர்களையும் புதைகுழிக்கே தள்ளி விடுகின்றது

தமிழ் நாட்டு சினிமாத்துறையின் தாக்கத்தால் இலங்கையிலே நல்ல தமிழ் தொலைக்காட்சி நாடகங்களை உருவாக்க முடியவில்லை.

தமிழ்நாட்டுப் போலிச்சினிமாவுக்கு பழக்கப் பட்டுப்போன மக்களால் நம் நாட்டு கலைஞர்களின் படைப்புக்களை உள்வாங்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதனால் இலங்கைத் தமிழ் நாடகங்களை வளர்க்க விளம்பரதாரர்கள் கூட முன்வராத துர்ப்பாக்கிய நிலையை காணக்கூடியதாக உள்ளது.

தலைநகரில் ஒலிஒளி நிகழ்ச்சி இன்று புகழ்பெற்ற நிகழ்ச்சியாகி விட்டது. தமிழக சினிமாப் படங்களுக்கு சினிமா நடிககளைப் போன்று உடையணிந்து நடனமாடுவது தலைநகரின் நவீன நாடக வடிவமாகும். இதற்கு தொலைக்காட்சி நிறுவனங்களும் ஆதரவு வழங்கி வருகின்றன.



இதற்கென்று தனி ரசிகர் கூட்டம் உண்டு. இதில் நடனமாடுபவர்களுக்கு தனிப்பட்டப் பெயர்களும் உண்டு. எந்த நடிகரின் பாணியைப் பின்பற்றி நடனமாடுகிறாரோ அவருடைய பெயரை அடைமொழியாகக் கொண்டு பெயர்கள் அவர்களாலேயே உருவாக்கப்படுகின்றன.

ஒலிஒளி நிகழ்ச்சி நடத்துபவர்கள் கலையை தாம் தான் வளர்த்தாகக் கூறிக்கொள்கிறார்கள். உண்மையில் இவர்கள் கலையை வளர்க்கின்றார்களா? கலையை அழிக்கின்றார்களா? என்பது அவர்களுக்குப் புரியாத புதிராகவே உள்ளது. ஏனெனில் தலைநகரின் மேலைத்தேய கலாசாரமும் ஊடுருவிக் காணப்படுகின்றது. போதையை ஊட்டக்கூடிய கலாசாரங்கள் மக்கள் மத்தியிலே பிரபல்யம் பெற்று வருவதனால் எது தமிழர்களின் கலை வடிவங்கள் என்று வரைவிலக்கணப்படுத்த வேண்டிய தேவை இன்று உருவாகி வருகின்றது.

தலைநகரில் வாழ்கின்ற தமிழர்கள் நாம் நாகரிகமானவர்கள் நாகரீகத்தின் வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம், நாகரிகம் இல்லாதவற்றை புறக்கணிக்கின்றோம் என்ற புதிய போக்கில் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையால் பாதிக்கப்படுவது யார் என்று தலைநகர மக்களுக்குச் சிந்திக்க நேரமில்லை. புத்திஜீவிகள் கூட கவர்ச்சி உலகில் சிக்குண்டு தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள். புத்தி ஜீவிகள் சற்று நிதானமாகச் சிந்திக்க வேண்டிய காலம் இது. இனியும் காலம் தாழ்த்தினால் திசைமாறிய சமூகத்தை மீண்டும் திசைமாற்ற வெகு காலம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இவ்வருடம் வெளிவந்துள்ள தமிழ் திரைப்படங்களில் ஆட்டோ ராணி, சூரியன், ஜெண்டில் மேன் என்பன மிகவும் ஆபாசங்களையும், வன்முறைகளையும் தாண்டுவதாக இருக்கின்றன.

ஆட்டோ ராணியில் நனைந்த மேனியுடன் இருக்கும் நாயகியின் மேல் நாயகன் ஒலைத் தொப்பியை வீசுகிறான். தொப்பி வயிற்றிலிருந்து சரிந்து சென்று அந்த இடத்தில் (?) நிற்கிறது. கதாநாயகன் தனது கையிலுள்ள கூரிய ஈட்டியால் தொப்பியைக் குத்தி தூக்குகிறான். இதை விட காற்றில் மலரும் மலரும் ஆடியவாறு உரசிக் கொள்வது, வண்டு தேன்குடிப்பது போன்ற குறியீடுகள் காட்டப்படுகின்றன.

காதல் காட்சியொன்றில் நாயகி நாயகனை பார்த்து 'உனக்கு கைத் துப்பாக்கியைத் தவிர வேறு எதையும் பிடிக்காதா? இரு கைகளாலும் பிடித்து வாயால் கொடு' என்று சொல்கிறாள். பிறகு நாயகி ஒரு முதலிரவு காட்சியை வேடிக்கை பார்த்து பேசும் வசனங்கள்...... ஏன் கேட்க, ஒரே அட்டகாசமாயிருக்கும்.

பிறகு செந்திலும் நடிகையும் மாவு பிசைவதும், உலக்கை பிடிப்பதும் வேறு எதைத்தான் உணர்த்துகின்றன.

சூரியன் படத்தில் நாயகி 'ஷட்டில்காக்' விளையாடும் போது குறிப்பாக மார்பகங்கள் குலோசப்பில் காட்டப்படுகின்றன. கதாநாயகனின் தொடையை தொடுகிறாள் கதாநாயகி.

நாயகியின் காதலுக்கு சம்மதம் கொடுக்காத தகப்பன் கருவுற்ற அவளது வயிற்றில் மிதிப்பதால் ஏற்படும் இரத்தப்பெருக்கு மிகவும் சென்சிட்டிவ்வாக காட்டப்படுகின்றது.

'ஜெண்டில்மேன்'படத்தில் வன்முறைகள் நிறைந்துள்ளன.

இவற்றையெல்லாம் பார்த்துத் தொலைய வேண்டியது தமிழ் இரசிகர்களின் தலைவிதி, வீடியோ, டி.வி வருவதற்கு முன்பென்றாலும் படங்களை செலக்ட் பண்ணி தியேட்டர்களுக்கு சென்று பார்க்கலாம். இப்போ ஆபாசம், வன்முறை நிறைந்த படங்கள் (டி.வி, வீடியோ ஊடாக) நமது படுக்கை அறைக்கே வந்து விடுகின்றன.

குடும்பத்துடன் இந்த தமிழ்ப் படங்களையெல்லாம் பார்க்க முடியுமா என்று விமர்சித்தால் இந்தப் படங்களைக் கூடுதலாக பார்ப்பவர்கள் குடும்பத்துடன் வந்து பார்ப்பதில்லை. அவர்களது டேஸ்டையே பிரதானமாக கொள்வதாக தமிழ்த் திரைப்பட உலகம் தெரிவிக்கின்றது.

யதார்த்தமாக படம் எடுத்தால் என்ன என்று கேட்டால் 'வீட்டு வாசலில் உட்கார்ந்து தெருவை வேடிக்கை பார்க்கலாமே அதற்கு ஏன் காசுக்கொடுத்து டிக்கட் வாங்கி தியேட்டர்களுக்கு வரவேண்டும்' என்ற கேள்வியை எழுப்புகிறார்கள்.

இந்தப் படங்களை பார்த்து மனநோயாளிகளாகி பாலியல் வன்முறைகளிலும், வேறு வன்முறைகளிலும் ஈடுபடுகிறார்கள் அதிகமான தமிழ்ப்பட ரசிகர்கள். அதனால் எத்தனை இளம் தலைமுறையினரின் வாழ்வு மண்ணாகியுள்ளது. எத்தனை பேரின் குடும்ப வாழ்வு சிதைந்துள்ளது.

தமிழர் பண்பாடென்றால் சினிமா பண்பாடாகவே தமிழ் நாட்டில் வெளிப்படுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com





# ஆபாசமின்றி உயிர்வாழா தமிழ்ச் சினிமா

சென்னையிலிருந்துகண்ணப்பன

செய்துவிட்டால் படங்கள் ஓடாது. லட்ச ரூபாய்களை செலவழித்த தயாரிப்பாளர் முதல் நடிகர் நடிகைகள் ஊழியர்கள் எல்லோரின் வாழ்வும் அம்போ தான் !. அதனால் 'சென்ஸார்' செய்யப்படக்கூடாது. புதிய விதிகள் திரைப்பட தொழிலை பாதிக்கும்' என்று கூறுகின்றனர். மக்களின் பண்பாடு கலை கலாசாரத்தை வளர்த்து சமூக வாழ்வை செழுமைப்படுத்துவதை வியாபார நோக்கம் கொண்ட 'கலையுலகம்' முற்றாக நிராகரிக்கிறது. அது மட்டுமல்ல, 'வியாபார கலையுலகம்' மக்களை அடக்கி விழிப்பற்றவர்களாக வைத்திருக்கும் நோக்கத்துடனேயே செயற்படுகின்றது.

என பயம் கொண்டுள்ளனர். அப்படி கலைப்படம் என்று ஒரு படம் பெயர் எடுத்து விட்டால் வெற்றியளிக்காது என்பது தமிழ் சினிமா உலகம் கண்ட அனுபவமாகும்.

புதிதாக இந்தியாவில் விதிக்கப்பட்ட சென்சார் கட்டுப்பாடுகள் வேறு மாநிலத்து கலைஞர்கள் மத்தியில் அதிருப்தியை தரவில்லையாம். மாறாக தமிழ்நாட்டு கலைஞர்களே சென்சார் விதிகளைக் கண்டித்து பேரணி (ஆர்ப்பாட்டம்) நடத்தியுள்ளனர் என்பது குறிபபிடத்தக்கது.

'கல்நாயக்' என்ற படத்தில் 'சோளிகே பீம் கயா ஹை' என்ற பாட்டுப்பற்றி இந்திய பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சை எழுப்பப்பட்டுள்ளது. அந்தப் பாட்டில் ஆபாசம் நிறைந்திருந்தபோதும் அது ஒரு கிராமியப்பாடல் என்பதால் அதனை படத்தில் இடம் பெற அனுமதிக்கலாம் என்று பாராளுமன்றம் சான்றிதழ் வழங்கியது.

எனினும் அதனை பெண் எம்.பிக்கள் எதிர்த்தனர். அதனை எதிர்த்து இந்தியாவெங்கும் பெண்கள் அமைப்புகள் ஆர்ப்பாட்டங்கள் செய்தனர்.

திரைப்படங்களில் இடம்பெறும் ஆபாசம், பெண்களை இழிவுபடுத்தும் காட்சிகள், வசனங்கள், வன்முறைகள் என்பவற்றை கண்டித்து பெண்கள் அமைப்புகள் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். தகவல் அமைச்சர் திரைப்பட ஆபாசம் வன்முறை என்பவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தினார். அதன்விளைவாக இந்திய திரைப்படத்துறையில் 'சென்சார்' கட்டுப்பாடுகள் தீவிரமாக அமுலுக்கு வந்துள்ளன.

இனிமேல் வெளிவரும் இந்திய தமிழ் சினிமாப் படங்களில் பெண்களின் மார்பகங்கள், தொடை, தொப்புள் ஆகிய உறுப்புகளை ரசிகர்களுக்குக் காணும் சந்தர்ப்பம் கிடைக்காது. பெண்களின் அவ் உறுப்புகளை அங்க அசைவுகள் மூலமும், ஆடை , அமைப்பு மூலமும் காட்டி படம் எடுக்கக்கூடாது என்பதை சென்சார் விதியை (தணிக்கை விதி) திட்டவட்டமாக கடைப்பிடிக்கப் போவதாக இந்திய சென்சார் சபை அறிவித்துள்ளது.

படங்களில் பெண்களின் உறுப்புகளை காட்டும், பொது இடங்களில் துகிலுறியும், வழிபாட்டிடங்கள், கல்வி நிறுவனங்கள், ஆஸ்பத்திரிகள் போன்ற இடங்களில் வன்முறை வெடிக்கும், தலையை வெட்டுவது, கத்தியால் குத்துவது, ரத்தம் கொட்டுவது போன்ற காட்சிகள் இடம் பெறக்கூடாது என்று திட்டவட்டமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது.

படங்களில் பெண்களின் உறுப்புகள் பற்றி இரட்டை அர்த்த வசனங்கள் இடம்·பெறக்கூடாதென்றும், பொது வாழ்வில் முக்கிய பதவிகளில் இருப்பவர்களை ( அமைச்சர்கள், போலிஸ் எஸ்.பி போன்றவர்கள்) தேசத்துரோகிகளாக சித்தரிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது.

படங்களில் ஆபாசமும், வன்முறையும் இடம் பெறக்கூடாதென்ற தணிக்கை விதிகள் இதற்கு முன்பும் இருந்த போதும் இந்திய சினிமாப் படங்களில் அவை எல்லை மீறி இடம் பெற்று வந்துள்ளன.

அதனால் இந்தியாவில் பெண்கள் விடுதலை அமைப்புகள் நடத்திய பாரிய போராட்டங்களின் காரணமாக தணிக்கை விதிகளை திட்டவட்டமாக கடைப்பிடிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதுபற்றி இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் கே.பி. சிங் தியோ பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளதுடன், படங்கள் திரையிடப்பட முன்னர் மத்திய திரைப்பட அத்தாட்சிகளை பெற வேண்டும் என்பதை வ்லியுறுத்தியுள்ளார்.

இதன் மூலமாவது தமிழ்ச் சினிமா உருப்பட வழி பிறக்கட்டும். மனித சமுதாய முன்னேற்றத்துக்கு உதவும் படங்கள் வெளிவரட்டும்.



ஏற்று நடிக்கும் நடிகர்களே கூடுதலாக கலந்து கொண்டுள்ளனர். விஜயகாந்த், அர்ஜுன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அந்த ஊர்வலத்தில் நடிகைகளும் கலந்து கொண்டுள்ளனர்.

அவர்கள் 'மக்கள் ஆபாசம், வன்முறை என்பவற்றையே விரும்புகிறார்கள். அவறறை படங்களிலிருந்து 'சென்ஸார்' எனவே மக்களின் விருப்பம் என்று கூறிக்கொண்டு சீரழிவான மலிந்து போன மனித உணர்வுகளை தட்டி எழுப்பி வேடிக்கை பார்ப்பதையே வியாபார சினிமாவும் செய்து வருகின்றது. நல்ல படங்களை நடிப்பவர்களும், எடுப்பவர்களும் எங்கே அவர்களது படத்தைக் 'கலைப்படம்' (Art Film) என்று யாரும் சொல்லி விடுவார்களோ

## தமிழ்ச்சினிமாவின் தரக்குறைவு







தமிழ் சினிமாவின் தரத்தை கீழ்க்காணும் சில உதாரணங்கள் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

★ ஆடு, மாடு, கோழி படங்கள் வெற்றி பெற்றதன் விளைவு முக்கிய வேடத்தில் நடிக்க நாய்க்கு ரேட் ஏறிவிட்டதாம். எவ்வளவு தெரியுமா ? ஒரு லட்சம் ரூபாயாம்.

★ முத்துராமன் மகன் கார்த்திக் , சிவாஜி மகன் பிரபு, தியாகராஜன் மகன் பிரசாந்த் என்று நடிகர்களின் வாரிசுகள் மட்டும் தான் நடிக்க வேண்டுமென்பதில்லை. 'ஆட்டுக்கார அலமேலு' என்னும் தேவர் படத்தில் நடித்த ராமு என்ற ஆட்டின் ஒரே மகனான மணிகண்டன் 'எங்க ஊரு ஆட்டுக்காரன்' படத்தின் ஹீரோ ஆகும்.

★ தாங்கள் தயாரிக்கும் கதையில் மட்டுமல்ல தல்களது வாழ்க்கையிலும் சென்டிமென்டில் ஊறியவர்கள் தமிழ்ச் சினிமாக்காரர்கள். ஏதோ ஒரு திரைப்படத்தின் பாடல்கள் பிரமாதமாகி விட்டனவாம். அந்தப் படத்தின் பாடல் பதிவின் போது ரிகார்டிங் தியேட்டரில் உள்ள கம்ப்யூட்டர் ஒன்றின் மீது யாரோ மறதியாக ஒரு ரூபாய் வைத்து விட்டார்கள் போலிருக்கிறது. வெற்றியின் ரகசியம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. இப்போது கம்பியூட்டருக்கு மேல் நூற்றுக்கணக்கில் ஒரு ரூபாய் நாணயங்கள் குவிக்கப்பட்டே ரிகார்டிங் நடக்கின்றதாம்.

## தமிழர் போராட்டத்துக்குக் காரணம்!

இலங்கைத் தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் வளர்ச்சி பெற்றமைக்கான காரணத்தை தமிழ் நாட்டின் பெயர்போன டைரக்டர் பஞ்சு அருணாசலம் பின்வருமாறு கூறியுள்ளார்.

'சிங்கள அரசு தமிழ்ப்பட இறக்குமதியின் மீது விதித்த கட்டுப்பாடு காரணமாக இலங்கைக்கு தமிழ்ப்பட ஏற்றுமதி குறைந்தது. அதனால் சரியான பொழுது போக்கு வடிகால் இல்லாத காரணத்தினால்தான் தமிழ் இளைஞர்களிடையே போராட்ட உணர்வு வளர்ந்து விட்டது.



படிப்பகம்

www.padippakam.com



லயம்

# வேஷம் கலைந்தது!

மக்கள் விரோத பேரினவாத யூ.என்.பிக்கு எதிராக மக்கள் திரண்டிருந்தபோது தமிழ் கலைஞர்களுள் பலர் எத்தகைய பாத்திரம் ஆற்றினர் என்பதற்குச் சில உதாரணங்கள்.

பிரபல மலையக முற்போக்கு எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமையில் கம்பஹா மாவட்ட யூ.என்.பி வேட்பாளர் ராஜா திவ்வியராஜனின் வரவேற்பு விழாவும், கலைஞர்கள் பாராட்டு விழாவும் நடைபெற்றது. இதில் (அமைச்சர்) தொண்டமான் (பிரதி அமைச்சர்) பி.பி.தேவராஜ், இரா. யோகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவ்விழாவில் இன்னுமொரு பிரபல மலையக எழுத்தாளர் மாத்தளைகார்த்திகேசு பாராட்டப்பட்டார் என்பதும் இவர் அவிசாவளையிலுள்ள பென்றிட் தோட்டத்தில் நடைபெற்ற யூ.என்.பி பிரசார கூட்டத்தில் உரையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையகத்தின் முற்போக்கு புத்திஜீவியாக இனங்காட்டிக் கொண்டுள்ள பேராசிரியர் கோ. சந்திரசேகரன் வெள்ளவத்தையில் நடைபெற்ற யூ.என்.பி பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றினார். இவர் நீண்டகால இடது சாரி பாரம்பரியம் கொண்டவர் என்றும் சொல்லப்பட்டது.

யூ.என்.பியால் பாதிக்கப்பட்ட கலைஞர்கள், புத்திஜீவிகள் எத்தனையோ பேர் கொலை செய்யப்பட்டவர்கள் எத்தனைபேர். நீண்டகாலமாக யூ.என்.பியில் இருந்த எத்தனையோ சிங்கள கலைஞர்கள் யூ.என்.பியின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத நிலைப்பாடு காரணமாக அதனை எதிர்த்துச் செயற்பட்டனர்.

நாட்டின் (ஏறக்குறைய) எல்லா கலைஞர்களுமே முனைப்பாக செயற்பட்ட போது இந்த குறிப்பிடத்தக்க தமிழ் கலைஞர்கள் மட்டும் ஏன் இந்த வேடம் பூண்டனர்?

அந்தனிஜீவா போன்ற ஒரு சில கலைஞர்கள் மேற்படி தமிழ் கலைஞர்களுக்கு மாறாகவே செயற்பட்டனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் கலைஞர்கள் எல்லோரும் பொ. ஜ. ஐ. முன்னணிக்கு ஆதரவாக செயற்பட்டிருக்க வேண்டுமென்பது நியதியல்ல. ஆனால் வரலாற்றில் பின்நோக்கி செல்லாமல் இருந்திருக்கலாமல்லவா?

முற்போக்கு கலைஞர்கள் என்று நமக்கு நாமே நாமம் சூட்டிக் கொள்வதல்ல கலைஞர்களின் சமூகக் கடமை.

சமூகத்தை முன்நோக்கி முன்னெடுத்து செல்வதில் மட்டுமே முற்போக்கு என்பதன் அர்த்தம் தங்கியுள்ளது.

இதை தமிழ் முற்போகக் கலைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டாமா?

## 1. ஒரு கூடைக்கொழுந்து

**(இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்)**

**தொகுதி 2**

**தொகுப்பாசிரியர்கள்:** யோ. சுந்தரலட்சுமி, செ. யோகநாதன்.

**விற்பனையுரிமை:** காந்தளகம்
4, முதல் மாடி,. ரகிசா கட்டிடம்,
834, அண்ணாசாலை சென்னை , - 600002

ஜூலை 1994 'புதிய பூமி' யின் 'லயம் - இலக்கியப் பகுதியின்' புத்தக உலகம், இந்த நூற்றாண்டின் சிறுகதைகள் தொகுதி 1 பற்றி அறிமுகப்படுத்தியிருந்தது. கடுகதி வேகத்தில் தொகுதி 2 வெளிவந்துள்ளமை 'திகைப்பையும், மகிழ்வையும் தருகிறது'.

''ஒட்டு மொத்தமாக எடுத்துப் பார்க்கின்றபோது ஈழத்துப் படைப்பிலக்கியம் செம்மையும் செழுமையும் நிறைந்ததாகவே அன்றிலிருந்து இன்றுவரை வளர்ந்து வந்திருக்கிறது. ஆயினும் இது சரியான முறையில் வெளியே அறியப்பட்டிருக்கவில்லை.'' எனக் குறிப்பிடும் தொகுப்பாசிரியர்கள் அந்தத் தரத்தை உணர்த்தும் சிறுகதைகளைத் தேடியெடுத்து வெளியிடுவதில் மிகுந்த சிரத்தை எடுத்துள்ளார்கள்.

தொகுதி 1இன் யாழ்ப்பாண மண்வாசனையைக் காட்டும் பனையும் கிழுவையும் வறள் நில வெறுமையும் எனத் தெளிவாகவுள்ள அட்டைப்படம் இதயத்தில் ஆழப் பதிந்ததென்றால், ஒரு கூடைக்கொழுந்து தரும் பசுமையும் குளுமையும் செறிந்த முகப்புப்படம் உடலைச் சீதளக்காற்றின் சிலிர்ப்பில் உலுக்கி எடுத்துவிடுகிறது எனலாம். தலைப்பையும் அதற்கமைவான அட்டைப்படத்தையும் தீர்மானிப்பதில் காட்டும் அக்கறை தெரிகிறது.

இதற்கு நாம் காட்டும் உற்சாகம் மிக்க ஆதரவு அடுத்த தொகுதிகளையும் விரைவில் வெளிக்கொணர உதவும். சம்பந்தன், அ.செ. முருகானந்தன், பித்தன், செ. கணேசலிங்கன், நவம், சு. வே, இ. நாகராஜன், அருள் செல்வநாயகம், என்.எஸ்.எம். இராமையா, அ. முத்துலிங்கம், நா. சோமகாந்தன், நந்தி, என். கே. ரகுநாதன், கே.வி. நடராஜன், பவானி ஆழ்வாப்பிள்ளை, பொ.தம்பிராசன், பாலு மகேந்திரா, அ.ஸ. அப்துல் ஸமது, அன்னலட்சுமி இராஜதுரை, மருதூர்க் கொத்தன், சாரல் நாடன், நெல்லை க. பேரன், ஜோர்ஜ் சந்திரசேகரன், நயீமா சித்திக், மலரன்பன், திக்குவல்லை கமால், நீர்கொழும்பூர் முத்துலிங்கம், மு. சிவலிங்கம், குந்தவை, மொழிவரதன், மாத்தளை பெ. வடிவேலன், கோகிலா மகேந்திரன், கவிதா, மொயின் சமீம், கே. கோவிந்தராஜ், ரஞ்சகுமார், ஃபெளஸியா யாசீன், பாலரஞ்சனி சர்மா ஆகியவர்களின் அறுபது வருடப் படையல்கள் ஐம்பத்தொன்று இத்தொகுதியில் உண்டு. பக்கங்கள் 645. இந்திய விலை ரூபா நூறு. ஈழத்து இலக்கிய ஆர்வலர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாக வாங்கிப்படித்து தமது நூலகத்தில் வைத்துப் பாதுகாக்க வேண்டிய நூல் இது.

## 2. கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்

**(நீலாவணன் வாழ்வும் இலக்கியப் பணியும்)**

**நூலாசிரியர்:** கலாநிதி சி. மௌனகுரு.

**வெளியீடு:** தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ்,
6/1, தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை 600 002.

நீலாவணன் பற்றி நூலாசிரியர் கூறும் வாசகங்கள் இவை: ''மட்டக்களப்புப் பிரதேசத்தின் வாழ்க்கை முறை, பேச்சு வழக்கு, சூழல், இயற்கை என்பனவற்றை கவிதையிற் கொணர்ந்த மட்டக்களப்பின் முதற் கவிஞர் நீலாவணன் எனலாம். இவரது பிரதேசப்பற்றே இதற்கான காரணமாகலாம். ஊரின் பெயரையே தன் பெயராக வைத்தும் திருமணம் முடித்ததும் மனைவி வீட்டுக்கு (பாண்டிருப்பு) செல்லும் மட்டக்களப்பு வழிமுறையாயினும் தான் பிறந்த ஊரான பெரிய நீலாவணையில் வாழ்ந்தமையும், தன் வீட்டுக்கு 'வேளாண்மை' என்று பெயரிட்டமையும் இவரின் அழுத்தமான பிரதேசப்பற்றுக்கு உதாரணங்களாகும்.

இப்பிரதேசப்பற்று இவரின் கவிதைப் போக்கினையும், சிந்தனைப் போக்கினையும் நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகச் செயற்பட்டுள்ளது. இப்பிரதேசப்பற்று இவர்காலத்தில் வாழ்ந்த மகாகவியினிடத்தும் காணப்பட்டமை இங்கு நினைவு கூறற்குரியது '' (பக் 88 - 89)

ஈழத்துக் கவிஞர் வரிசையில் அழியாத இடம் ஒன்றைப்பெற்ற நீலாவணனின் பகைப்புலத்தையும் கவிச்சிறப்பையும் வெளிக்கொணர்ந்து, வேண்டிய இடங்களில் ஒப்பியலாய்வும் செய்யும் ஆசிரியர் சி. மௌனகுருவின் முயற்சி அனைவராலும் வரவேற்கப்படும் என எதிர்பார்க்கலாம். சமகாலக் கவிஞர்கள் பற்றிய ஆய்வுகள் எம் மத்தியில் மிகக் குறைவாக உள்ள இக்காலத்தில் இந்த முயற்சி பாராட்டத்தக்க ஒன்று.

# பிற்குறிப்பு

-காலைக்கதிர்

## கவனத்தை ஈர்க்கும் ஓர் இலங்கைச் சிறப்பிதழ்

ஏற்கனவே இந்தியாவிலிருந்து இந்தியா டுடே, சுபமங்களா போன்ற சஞ்சிகைகளும் பல பத்திரிகைகளும் இலங்கைச் சிறப்பிழ்களை வெளியிட்டுள்ளன. அவை எமது துயரங்களையும் துணிவுகளையும் இலக்கிய நயத்தோடு வெளியிட்ட பாங்கு பலராலும் பாராட்டப்பட்டன. அவற்றை வெறும் வியாபார உத்தியாகக் கணித்தவர்களும் - அவ்வாறு கணிப்பதில் உள்ள கொச்சைத்தனத்தை அம்பலப்படுத்தும் எதிர்க்கணைகளுக்கு இலக்கானார்கள்.

எந்த வகையிலும் வியாபார உத்தி எனச் சொல்லமுடியாத இயல்புகளுடன் இன்னொரு இலக்கியச் சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. சாரதா ( மலர் 2, இதழ் 3, மே' 94) இதழ் வர்த்தக நோக்கற்ற சிறுபத்திரிகைக் கனதியுடன் இந்தப்பணியை முன்னெடுத்துள்ளது (ஏற்கனவே வேறும் சில சிறு சஞ்சிகைகள் இலங்கைச் சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளன).

இலங்கை இலக்கியப் பயணத்தை முடித்துச் சென்ற 'சுபமங்களா' ஆசிரியர் கோமல் சுவாமிநாதனின் பேட்டி ஒரு சிறப்புப்பரிசு (அவரது வருகையை அறிவித்த சுவரொட்டியிலுள்ள ஈழ ஓவியரின் கோட்டுப்படம் அட்டையில் பிரசுரிக்கப்பட்டிருப்பது மகிழ்வைத்தரும் அம்சம்).

சிவசேகரம், ரஞ்சகுமார், புவனம், சுபிகால், கொ.றோ. கான்ஸ்டன்டைன், செ. யோகநாதன் உட்பட தமிழக எழுத்தாளர்களது ஆக்கங்களும் உண்டு. சாரதா தொடர்ந்தும் ஈழத்துப்படைப்புகளுக்கு கூடிய முன்னுரிமை வழங்க உள்ளது. ஆசிரியர் கோ.பாஸ்கரன், பொறுப்பாசிரியர் சூரியசந்திரன்.

இலங்கையில் கொழும்பு 11 இலுள்ள சவுத் ஏசியன் புக்ஸுடன் தொடர்பு கொண்டு பெறக்கூடிய இதன் விலை ரூபா 18.

## மருமகள் நிலைக்குள்ளாகும் நந்தினி சேவியர்

ஜூலை 13ம் திகதி கலைப்பூங்காவில் நந்தினி சேவியரின் '' அயற்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்'' சிறுகதைத் தொகுதியை மூத்த எழுத்தாளர் - விமர்சகர் எம்.ஏ. நுஃமான் அவர்கள் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். நடுநிலை தவறாமல் துணிவுடன் கருத்துகளை முன்வைக்கும் அவரது பண்பு இந்த நிகழ்விலும் வெளிப்பட்டது.

ஆயினும் கவனக்குறைவால் நந்தினி சேவியர் இழைத்துள்ள தவறுகள் என நுஃமான் குறிப்படுவன நெருடலாக உள்ளன. வேண்டுமென்றே குற்றம் கண்டுபிடிப்பதாக மட்டுமன்றி மாமிக்கு ஒரு நீதியும் மருமகளுக்கு வேறொரு நீதியும் கற்பிப்பதாயும் தெரிகிறது.

'தரிசனம் கொண்டான்', ஆறுமுகம் கொண்டான்' என்று கொள் என்ற சொல்லை நந்தினி சேவியர் பாவிப்பது நெருடலாக உள்ளது எனக் குறிப்பிடும் நுஃமான், அது மௌனியின் பாதிப்பாயிருக்கலாம் என்பதுடன், மௌனி அதைப்பலவித பரிமாணங்களில் கையாள்பவர் என்றும் காட்டுகிறார். உண்மையில் மௌனியின் நடைபற்றி பல விமர்சனங்கள் உண்டு. அது மிக மோசமான நெருடல் உடையதென்பது வரை மௌனி கையாண்டால் இலக்கியத்தரமாயிருப்பது நந்தினி சேவியர் விடயத்தில் மட்டும் எப்படி நெருடலாக மாறும்?


அவர் தவறெனக் காட்டும் இன்னொரு வசனம் - 'நன்கு வெய்யில் எறித்த பங்குனி மாத நள்ளிரவில் அவனது தாய் புற்று நோயால் திடீரென இறந்தாள்'. இதைக்கூறியவர் 'நள்ளிரவில் வெய்யில் எறிக்குமா ?' , 'மாரடைப்பில் திடீரென இறப்பது போலப் புற்றுநோயிலும் திடீரெனவா இறப்பார்கள் ?' என்ற கேள்விகளை எழுப்புகிறார். இந்த வசனம் வெக்கையான பங்குனி மாதத்து வெய்யில் எறித்த ஒரு நாளின் இரவைச் சொல்கிறதென்பது தெளிவாய் உள்ளது. எந்த நோயாயினும் நோயில் பல நாள் அழுந்தி, அணையும் சுவாலை சுடர்விடுவது போலத் தெளிந்து, பின் திடீரென இறந்துவிடலாம் என்பது இயற்கை.

இந்த வசன நடை எண்பதுகளில் பலரால் கையாளப்பட்டுள்ளது. அந்த தசாப்தத்துக்குரிய நடையாக இதைக் கணித்திருக்கலாமே.

படிப்பகம்

www.padippakam.com





# ஒரு தேசியத் தலைவரின் உருவாக்கம்

நமது நாட்டிற்கும் ஒரு நெல்சன் மண்டேலா தேவையென பல நேர்மையான அரசியல் தலைவர்கள் கூறும் அளவிற்கு நெல்சன் மண்டேலா இன்று தனது நாட்டில் மட்டுமல்ல விடுதலை விரும்பும் சகல தேசங்களிலும் மதிக்கப்படும் ஒரு தலைவராக விளங்குகிறார். தான் சார்ந்த இனத்தை மட்டும் போற்றிப் புகழாது அந்த நாட்டின் சகல இனங்களின் இனக்குழுக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றத் திட சங்கற்பம் செய்துள்ளார்.

அவர் இவ்வருடம் மே மாதம் 10 ஆம் திகதி தென் ஆபிரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது அந்த நாட்டில் ஆங்கிலமும் , ஆபிரிகான் ஆகிய இரு மொழிகளுமே அரச கருமமொழிகளாக இருந்தன. ஜனாதிபதியாகப் பதவியேற்ற மண்டேலா இந்த இரண்டு மொழிகளுடன் மேலும் பதினொரு பிரதேச மொழிகளையும் அரச கரும மொழிகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். ஏற்கனவே பாராளுமன்றத்தில் உடனுக்குடன் மொழி பெயர்ப்பு வசதிகள் சகல மொழிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இது மட்டுமல்ல தென் ஆபிரிக்க வெள்ளை சிறுபான்மை இனத்தவரின் ''டைஸ்ரெம்'' (ஆபிரிக்கானாஸ்) தேசிய கீதமாக விளங்கி வந்துள்ளது. இந்தத் தேசிய கீதத்திற்குப் பல எதிர்ப்பு இருந்து வந்தது. 1992 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் தென் ஆபிரிக்கத் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை"என்பது குறிப்பிடத்தக்கது.

தென் ஆபிரிக்க சுதேசிகளின் தேசிய கீதம் '' என்கோசி சீகேலி ஆபிரிக்கா''. ஜனாதிபதி மண்டேலா பதவியேற்ற சமயம் வெள்ளைச் சிறுபான்மை இனத்தவரின் தேசிய கீதம் முதலில் இசைக்கப்பட்டு அதன் பின்னர் சுதேசிகளின் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார். அவ்வாறே செய்யப்பட்டது. ஜனாதிபதி பதவியேற்ற தினம் சாம்பியாவுக்கும் தென் ஆபிரிக்காவிற்கும் இடையே எலிஸ் பூங்கா விளையாட்டரங்கில் இடம்பெற்ற உதைபந்தாட்டத்தில் கலந்து கொண்ட சமயம் 60,000 ரசிகர் மத்தியில் இரண்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. முக்கிய நிகழ்ச்சிகளின் போது இரண்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

வெள்ளை இனவாத தேசியக் கட்சியினருக்கு தனது மந்திரி சபையில் ஆறு இடங்களை கொடுத்ததன் மூலம் தென்ஆபிரிக்காவை உண்மையான ஐக்கியப்பட்ட நாடாக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினார்.

பல இழப்புகளுக்கும் பல கொலைகளுக்கும் காரணமாயிருந்த இங்காத்தா- -சுதந்திரக் கட்சிக்கு மூன்று மந்திரிப் பதவிகளை வழங்கியுள்ளார். இந்த இரண்டு கட்சியினருக்கும் முக்கிய பதவிகளான நிதி, உள்நாட்டு அலுவல்கள், மாகாண அலுவல்கள் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நீதி, போக்குவரத்து, நீர் வன வளம் என்பன இந்தியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒரு இந்திய பெண்மணியே சபையின் சபாநாயகராகவும் உள்ளார்.

மிகவும் சக்தி வாய்ந்த வெள்ளையர்களைக் கணிசமான அங்கத்தவர்களாகக் கொண்ட தென் ஆபிரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சி நடைபெற்ற தேர்தலில் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் ஒரு அங்கமாகவே போட்டியிட்டு வெற்றியும் ஈட்டியது. தென் ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியும் நெல்சன் மண்டேலாவின் மந்திரி சபையில் இடம் பெற்றுள்ளது.

இவை யாவும் நெல்சன் மண்டேலாவை முழுத் தென்ஆபிரிக்க மக்களின் தேசியத் தலைவராக உயர்த்தியுள்ளது. அவர் தான் சார்ந்த கட்சியை இனத்தை மட்டும் பிரதிநிதித்துவம் செய்யாமல் முழு நாட்டினதும் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறார். அவரைப் போன்ற தலைவர்கள் நமது நாட்டிற்குத் தற்சமயம் அவசியம் தேவைப்படுகின்றது.

எஸ். ஞானம்

# கிளிங்டனின் எதிர்காலத்திற்கு காஸ்ரோ ஒரு சவால்



கியூபாவிலிருந்து பெருந்தொகையானவர்கள் அகதிகளாக அமெரிக்காவிற்குச் சென்ற வண்ணம் இருக்கின்றனர். அவர்கள் கியூபாவிலிருந்து கள்ளத்தனமாக வள்ளங்களில் ஏறி கடற் கொந்தளிப்பைப் பொருட்படுத்தாது அமெரிக்காவிற்குச் செல்கின்றனர்.

கியூபாவில் சோஷலிச ஆட்சியைக் கவிழ்க்க பலவிதமான நெருக்கடிகளை அமெரிக்கா கொடுத்து வருகின்றது. அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் பொருளாதாரத் தடையால் கியூபா பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றது. இருப்பினும் கியூபாத் தலைவர் சோஷலிசத்தைக் கைவிடவில்லை.

கியூபாவிலிருந்து பெருமளவில் அகதிகளை வரவழைத்து கியூபாவில் தலையிட அமெரிக்க ஜனாதிபதி கிளிங்டன் உள்ளூர எண்ணங் கொண்டிருந்தார். அந்த



அடிப்படையிலான தூண்டுதலினாலேயே கியூபா மக்கள் அகதிகள் அமெரிக்காவிற்குச் செல்கின்றனர்.

அதேவேளை அகதிகளாக கியூபா மக்கள் அமெரிக்கா வருவதற்கு கியூபா ஜனாதிபதியே காரணம் என்று குற்றம் சாட்டுகிறது அமெரிக்கா. அது அகதிகளை அனுமதிக்க முடியாது என்று அறிவித்துள்ளது.

கடைசியாகக் கிடைத்த தகவலின்படி கியூபாவும் அமெரிக்காவும் இருதரப்புக் குடியகல்வுப் பேச்சு வார்த்தைக்கு நியூயோர்க்கில் சந்திக்க இருக்கின்றன. கடந்த 10 வருடங்களில் இது 12ஆவது சுற்றுப் பேச்சு வார்த்தையாகும். இரண்டு நாட்டு நகரங்களிலும் மாறி மாறி இடம் பெற்று வரும் பேச்சு வார்த்தை இம்முறை நியூயோர்க்கில் இடம்பெற உள்ளது.

1984 இலிருந்து 11 தடவை பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. கடைசிச் சுற்றுப் பேச்சு வார்த்தை 1993 டிசம்பர் மாதம் சந்தியாகோவில் இடம்பெற்றது. ''இந்தப் பேச்சு வார்த்தையின் நோக்கம் சட்டரீதியான, ஒழுங்கான, பாதுகாப்பான குடியகல்வுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பரிசீலனை செய்யும்'' என அமெரிக்க குடியகல்வுத் திணைக்களப் பேச்சாளர் மைக்கேல் மைக்கறி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் இருதரப்புக் குடியகல்வை அனுமதித்து வந்த அமெரிக்கா திடீரென இதற்குத் தடை விதித்துள்ளது. அமெரிக்காவினதும் அதன் அடிவருடிகளினதும் பொருளாதாரத் தடைகளினால் கியூபாவிற்குப் பெரும் கஷ்டங்களை கொடுத்து வந்துள்ளது. கியூபாவில் ஏற்படும் நெருக்கடிக்கு அங்குள்ள சோஷலிச அமைப்புத்தான் காரணம் என்றும் கியூபா மக்கள் மீது தனக்கு கரிசனை உண்டு எனவும் அமெரிக்கா மாய்மாலம் காட்டி வந்துள்ளது.

தனது பரம எதிரிகளாகக் கருதும் சீனா, வடகொரியா, வியட்னாம் ஆகிய நாடுகளுடன் பல்வேறு விஷயங்களுக்குப் பேச்சுவார்த்தையில் ஈடுபட தயார் நிலையில் உள்ள கிளிங்டன் நிர்வாகம் சென்ற வாரம் வரை கியூபாவுடன் பேச்சு வார்த்தையை நடாத்த மறுத்ததுடன், கியூபாவைச் சீண்டும் வேலையிலேயே ஈடுபட்டு வந்துள்ளது. ஆனாலும் கிளிங்டனின் எதிர்பார்ப்புக்கு மாறாகவே அமெரிக்காவில் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

உள்நாட்டில் கிளிங்டனின் செலவாக்கு 40%த்திற்கு வீழ்ச்சியடைந்துள்ள வேளையில் கியூபா குடியகல்வுப் பிரச்சினை அவருக்குப் பெரும் அரசியல் வீழ்ச்சியை ஏற்படுத்தக் கூடும் என்பதை கிளிங்டன் கடைசி நேரத்தில் உணர்ந்துள்ளார். அதனாலேயே விடுமுறையில் இருந்த இராஜாங்க காரியதரிசி வாறன் கிறீஸ்தோபர் 25ஆம் திகதி வாஷிங்டனுக்கு அவசர அவசரமாக அழைக்கப்பட்டார்.

வெள்ளைமாளிகையையும் இராஜாங்க திணைக்களமும் கியூபா விடயத்தில் எவ்வாறு அணுக வேண்டும் என்று கியூபாவில் 1959இல் பற்றிஸ்டா ஆட்சி கவிழ்க்கப்பட்டதிலிருந்து எதிரும் புதிருமான அபிப்பிராயங்களைக் கொண்டு வந்துள்ளன.

கிளிங்டன் உள்நாட்டில் சரிந்து வரும் செல்வாக்கைச் சரிசெய்வதற்காக நெகிழ்ச்சியான போக்கை கடைப்பிடிக்கக் கூடுமென எதிர்பார்க்கலாம். எவ்வாறாயினும் முடிந்தால் கியூபாவில் ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்த பின் நிற்க மாட்டார்.

# மண்டேலாவும் சிறைக்கூடங்களும்

நெல்சன் மண்டேலா 27 வருடங்கள் சிறையில் இருந்தவர். அவர் தென்ஆபிரிக்கச் சிறைக்கூடத்தில் நிலவிய ஊழல்கள், வசதியீனங்கள் என்பன பற்றி நன்கு தெரிந்து வைத்திருப்பார் என்று சொல்லாமலே விளங்கும். அவர் அண்மையில் ஒரு சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்தார்.

அதன் பின்னர் அவர் விடுத்த அறிக்கையில் தென்ஆபிரிக்க சிறைகளில் கைதிகள் மந்தைகள் போல் நெருக்கடியில் அடைபட்டிருப்பதாகவும் அதை நிவர்த்தி செய்ய மேலதிகச் சிறைக்கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று பணித்திருக்கிறார். சிறைக்கூடங்கள் குற்றவாளிகளை திருத்த வழியமைக்க வேண்டுமே தவிர அவர்களைக் கொடூரமானவர்களாக உருவாக்குவதற்கு அல்ல.

நமது நாட்டில் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் மந்தைகள் போல் அடைபட்டுக் கிடக்கின்றனர். அவர்களுக்குச் சுகாதார ரீதியில் மலசலம் கழிக்கக் கூட முடியாத நிலை உள்ளது. புதிய அமைச்சரின் கவனத்தை இந்த விடயம் ஈர்க்குமா ?

படிப்பகம்

# திருகு தாளங்கள்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இணைந்து கொள்ள இ. தொ.கா பல முயற்சிகளை எடுத்தாக அறிய முடிகின்றது. யூ.என்.பி பட்டியலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இ. தொ. கா. உறுப்பினர்கள் பொ. ஜ. ஐ முன்னணி அரசாங்கத்துடன் இணைவது சாத்தியமா என்பது பற்றி இ. தொ.கா ஆராய்ந்துள்ளது.

பொ. ஜ. ஐ. முன்னணியின் பிரதிதலைவியும், பிரதமருமான சந்திரிகா குமாரணதுங்க இ. தொ. கா அரசுடன் இணைவதை விரும்பிய போதும் முன்னணி உறுப்பினர்களின் எதிர்ப்பு காரணமாகவும், நடைமுறை சிக்கல்கள் காரணமாகவும் இ.தொ. கா அரசுடன் இணைவது சாத்தியமில்லை.

'பழைய பாண் கியூவை' எடுத்துக்காட்டி தொழிலாளர்களின் வாக்குகளை ஏறக்குறைய முழுதாக திரட்டி யூ.என்.பிக்கு கொடுத்துவிட்டு அரசுடன் இணையப் போவதாக் கூறுவது நியாயமா பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கத்திடம் செல்லச்சாமி செல்வாக்குடையவராக இருப்பதால் தனது இருப்பும், இ. தொ. கா வின் இருப்பும் ஆட்டம் கண்டுவிடலாம் என்பதனாலேயே இ.தொ.கா. தலைவர் தொண்டமான் அரசுடன் சேர்ந்து கொள்ள முயற்சிகளை மேற்கொண்டார்.

இது முடியாமல் போனதால் அரசுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதில் அக்கறை கொண்டிருப்பதாக தொண்டமான் அறிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க மலையக மக்கள் முன்னணி, அஸிஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்பவற்றின் கூட்டு சுயேட்சைக் குழுவில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சந்திரசேகரன் பொ.ஜ.ஐ. முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டார்.

இது சந்திரசேகரத்தின் ஆதரவாளர்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அதாவது சந்திரசேகரத்தின் கோரிக்கையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்க பொ. ஜ. ஐ. முன்னணி தயக்கம் காட்டுவதாலேயே தனியாக் போட்டியிடுவதாகக்கூறினார் சந்திரசேகரன் பிரசாரக் கூட்டங்களிலும் பொ. ஜ. ஐ. முன்னணியை எதிர்த்துப் பேசிவந்தார்.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு சில மணி நேரங்களில் பொ. ஜ. ஐ. முன்னணியுடன் சேர்ந்து கொண்டது எப்படி ? என்று ஆதரவாளர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

மலையக மக்களின் உரிமைகள் பற்றி தான் பொ.ஜ.ஐ. முன்னணி அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கம் காணப்பட்டது. அதன் பின்னரே பொ.ஜ.ஐ. முன்னணி அரசுடன் சேர்ந்து கொண்டதாகவும் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அவர் இணக்கம் கண்டதாக கூறியுள்ள மலையக மக்களின் உரிமைகள் பற்றி பொ. ஜ. ஐ. முன்னணி ஏற்கனவே மலையக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தது தெரிந்ததே. பொ.ஜ. ஐ. முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுருக்கமாகவும், இணைப்பில் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. அதன் விபரம் வீரகேசரி பத்திரிகையில் விளம்பரமாகவும் பிரசுரமானது.



அதுமட்டுமல்ல இன்னொரு சுவையான விடயமும் நடைபெற்றுள்ளது. அதாவது பொ.ஜ. ஐ.மு. வழங்கிய அமைச்சர் பதவியை ஏற்க மறுத்து விட்டாராம் சந்திரசேகரன். அவர் அப்பதவியை ஏற்றுக் கொண்டால் கொழும்பிலேயே தங்க வேண்டி வரும். அவர் மலையகத்திலிருந்து சேவை செய்யுவே விரும்புகிறாராம். இத்தகவல்களை அவரது காரியாலயத்திலுள்ளவர்கள் தொழிலாளர்களுக்கு தெரிவித்துள்ளனர்.

ஆனால் பிரதிஅமைச்சர் பதவியை ஏற்க முடிவு செய்யப்பட்டதாக ( அமைச்சர் பதவி எதுவும் வழங்கப்படவில்லை) பத்திரிகையில் செய்தி வெளிவந்த பிறகே, தொழிலாளர்களுக்கு காரியாலயத்திலுள்ளோர் தெரிவித்துள்ளனர்.

தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள தவிர்க்க முடியாத பொறுப்பையும், கடமைகயையும் தட்டிக் கழிக்க முடியாதென இப்போது சந்திரசேகரன் கூறுகிறார். ஆனால் தேர்தல் வேட்பு மனு தாக்கல் செய்த பிறகு தேர்தல் வெற்றிக்கு முதல் தேசிய நலனுக்கு எம்மை நாம் விட்டுக் கொடுக்க முடியாது என்று கூறினார். அதாவது பொ.ஜ. ஐ. முன்னணியுடன் சேர்வதற்காக எமது நலனை விட்டுக் கொடுக்க முடியாது என்று அப்போது கூறினார். இப்போது தேசிய நீரோட்டத்துடன் கலப்பதன் அவசியம் பற்றி கூறுகிறார்.

அடுத்ததாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் போட்டியிட்ட மலையக தமிழர்கள் ஒருவரும் வெற்றி பெறவில்லை. அவர்களில் கொழும்பில் செல்லச்சாமியின் பிரசாரங்களும், உழைப்பும் குறைத்து மதிப்பிட முடியாது.

கண்டி மாத்தளை, கேகாலை, நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழர்களின் பிரசாரங்களில் கூடிய கவனம் செலுத்தவில்லை என்று குறை கூறப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டவர்களுக்கு கூடிய வாய்ப்பு இருந்தபோதும், அவர்களின் நம்பிக்கையீனம் காரணமாக பிரசார வேலைகளில் கவனம் செலுத்தவில்லை. அவர்களின் முழுப்பலத்தையும் (தொழிற்சங்கப் பலம்) பிரயோகிக்கவில்லை என்பது அவதானிக்க முடிந்தது. அவர்களின் இலக்கங்கள் என்ன என்று வாக்காளர்களுக்கு தெரியாமல் இருந்ததுடன் பல இடங்களில் பொ. ஜ. ஐ. முன்னணியில் தமிழர்கள் போட்டியிடுகிறார்களா என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரசார பிரிவினால் அச்சடித்துக் கொடுக்கப்பட்ட பிரசுரங்களை மலையக மக்களில் பெரும்பாலானோர் கண்டதாகவோ, வாசித்ததாகவோ கூறவில்லை. ஆனால் தமிழ் பிரசாரங்களில் மலையக மக்களை கருத்தில் கொண்டு பெருந்தொகை பிரசுரங்கள் அச்சடித்து வேட்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பொ. ஜ. ஐ. முன்னணியின் பிரசாரப்பிரிவு தெரிவித்தது.

அரசியலில் யூ.என்.பிக்கும் பொ. ஜ. ஐ. முன்னணிக்கும் வாழ்வா சாவா என்ற போராட்டம் நடைபெற்றவேளை பொ.ஜ.ஐ. முனணியின் சார்பில் மலையகத்தில் போட்டியிட்டவர்களின் பங்களிப்பு மதிப்பிடத்தக்கதாக இல்லை என்று பரவலாக விமர்சனம் செய்யப்படுகின்றது. அவர்களுக்கு டிக்கட் எடுபதிலிருந்த அக்கறை பொ.ஜ.ஐ. முன்னணியை வெல்ல வைப்பதில் இருக்கவில்லை என்று கூறப்படுகின்றது. ○

## தேசிய இன உணர்வு

மலையகத்தில் கண்டி, பதுளை, நுவரெலியா மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வி அடைந்துள்ளது. பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் யூ.என்.பி க்கே வாக்களித்துள்ளனர்.

கொத்மலை தொகுதியிலும் (நீண்ட நாட்களாக சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தது) பொ.ஜ.ஐ. முன்னணி தோல்வி அடைந்துள்ளது.

மலையக மக்களில் யூ. என்.பிக்கு வாக்களித்தவர்களும் சரி, பொ.ஜ.ஐ.முன்னணிக்கு வாக்களித்தவர்களும் சரி தமிழர்களுக்கே வாக்களித்துள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் பொ. ஜ. ஐ. முன்னணியில் தமிழ் வேட்பாளர் நிறுத்தப்படாததால் அப்பகுதியில் மலையக மக்கள் பெரிதும் அதிருப்திக்குள்ளாகியிருந்தனர். ○

## யாருக்கு ஏன் ஓட்டுப் போட்டேன்?

**தலவாக்கொலை ரட்னகிரி பாமஸ்டன் தொழிலாளி**

நான் சந்திரசேகரனுக்கு ஓட்டுப் போட்டேன். எங்கள் அஸிஸ் ஜனநாயக சங்கத்திலிருந்து இருவர் அதே சுயேட்சைக் குழுவில் போட்டியிட்டனர். அதனால் எமது சங்கம் அவர்கள் இருவருக்கும் சந்திரசேகரனுக்கும் ஓட்டுப் போடும்படி கேட்டுக் கொண்டது.

இந்தப் பகுதியில் எங்க சங்கத்தில் 10, 15 ஆயிரம் இருக்கிறார்கள். அவர்களில் 7,8 பேராவது (சந்திரசேகரனின் சுயேட்சைக் குழுவிற்கு) மண்வெட்டிக்கு ஓட்டு போட்டிருப்பார்கள்.

**தலவாக்கொலை சமர்செட் தோட்ட பெண்தொழிலாளி:**

நான் சந்திரசேகரனுக்கு ஓட்டுப் போட்டேன். அவருட்ட யூனியனுல தானே இருக்கிறேன். அதனால் அவருக்கு போட்டேன்.

**தலவாக்கொலையில் ஒரு ஆசிரியர்.**

நான் மண்வெட்டிக்குத்தான் ஓட் டுப் போட்டேன். சந்திரசேகரனில் பெரிய நம்பிக்கை வைத்து ஓட்டுப் போடலை. பொதுஜன ஐக்கிய முன்னணியின் தமிழ் வேட்பாளர்கள் நம்பிக்கை கொடுக்க கூடியவர்களாக இருக்கவில்லை.

**பொகவந்தலாவை பெண் தொழிலாளி.**

நான் நாக்காலிக்கு மட்டும் போட்டேன். அதில நிக்கும் தமிழ் ஆளுங்க நம்பர் தெரியாது. யாரும் எங்க தோட்டத்துக்கு வரலை.

எங்க தோட்டத்து கோப்பரட்டி கடை (கூட்டுறவு சங்கக்கடை) மூடிக்கெடக்கு. லயத்து கடைகளில் அநியாயக் கொள்ளை லாபத்து சாமான் விக்கிறாங்க. சிறிலங்கா வந்தா கோப்பரட்டி கடை திறப்பாங்க. அதுனாலத்தான் அவங்களுக்கு போட்டேன்.

**கண்டியில் ஒரு வர்த்தகர்.**

நான் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு போட்டேன். மூன்று சிங்கள வேட்பாளர்களுக்கு விரு ப்பு வாக்கைக் கொடுத்தேன். ஒரு தமிழர் போட்டியிட்டார் என்று தேர்தல் முடிந்தபிறகு பிறர் சொல்லியே எனக்கு தெரியும்.

ஒரு மாற்றம் வேணுங்கிறத்துக்குத்தான் பொ.ஜ.ஐ.முன்னணிக்கு போட்டேன்.

**கலஹாவில் ஒரு தொழிலாளி.**

நான் யானைக்கு போட்டேன். ஓட்டுக் கெடச்ச நாளிலிருந்து யானைக்குத்தான் போட்டேன். ஏன்னா தலைவர் தொண்டமான் யானைக்கு போடத்தான் சொல்லியிருக்கிறார். அந்த காலத்துல எங்க தோட்டத்துல பட்டு வளர்க்க திட்டம் வந்திச்சு. அதனால எங்களுக்கு பாதிப்பு அதிகம். அதைவிட பஞ்சம். இதையெல்லாம் யோசிச்சுதான் யானைக்கு பேழட்டேன். இப்ப சிறிலங்கா வந்திருச்சி. எப்படியோ பழையமாதிரி எங்கள அடக்காம இருந்தா நாங்க அவங்களுக்கு ஆதரவு தான்.

**நாவலப்பிட்டி தொழிலாளி.**

நான் யானைக்கு போட்டேன். 1970-77 இல எங்க தோட்டத்துக்கு 5 சிங்கள காவல்காரங்க இருந்தாங்க. அவங்களுக்கு வேலை தொழிலாளி வீடுகளுக்கு விருந்தாளியா வாரவங்களை பாத்து ஏசி விரட்டுவது. இதைவிட பெரிய அட்டகாசமெல்லாம் செஞ்சாங்க. இந்த அரசாங்கம் இனிமே அப்படி செய்ய மாட்டாதுன்னு சொல்லுறாங்க. தலைவர் தொண்டமான் கூட இந்த அரசாங்கத்தோட சேரப்போறாராம்.

**பதுளையில் ஒரு தொழிலாளி.**

நான் நாக்காலிக்குத்தான் ஓட்டுப் போட இருந்தேன். அதுல தமிழர் ஒருத்தரும் இல்லை. யூ.என்.பிக்குப் போட விருப்பமில்லை. அதுனால தொழிலாளர் பாதை ஆட்களின் சுயேட்சை குழுவிற்கு போட்டேன்.

**இராகலையில் ஒரு தொழிலாளி.**

நான் நாட்காலிக்கு போட்டேன். 1970-77 கால பஞ்சம் எப்படியிருந்தாலும் இப்போ தோட் டங்களை கம்பெனிக்கு கொடுத்ததாலை பெரிய கஷ்டம். அந்தக் கஷ்டத்தை பொ.ஜ.ஐ. முன்னணி மாத்தும் என்ற நம்பிக்கையிலைதான் போட் டேன்.

**நுவரெலியாவில் ஒரு தொழிலாளி.**

நான் யானைக்குப் போட்டேன். அதுல நின்ன தமிழ் ஆளுங்க மூனு பேருக்கும் போட்டேன். தமிழ் ஆளுங்க ஓட்டு ஒடைஞ்சுப் போயிடும். அதுனாலத்தான் நான் அவங்களுக்குப் போட்டேன்.

**பூண்டுலோயாவில் ஒரு தொழிலாளி.**

நான் இ. தொ. கா அங்கத்தவராக இருந்தாலும் யானைக்குப் போடலை. நாட்காலிக்குப் போட்டேன். அதில பெரிய நம்பிக்கை இல்லை.

ஆனா வீடு சொந்தமாக்கிறேன்னு பொய் சொன்னவங்களுக்கு எதிரா போடனும்னு போட் டேன்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





## வீரத் தியாகிகள்

நுவரெலியா மாவட்டத்தில் கந்தப்பொளை கோட்லாஜ் தோட்டத்தில் இ. தொ. கா அங்கத்தினர்களுக்கும் மலையக மக்கள் முன்னணி அங்கத்தினர்களுக்கும் ஏற்பட்ட மோதலில் இ. தொ. கா அங்கத்தினர் ஒருவரின் கை துண்டிக்கப்பட்டது. அதன் பின்னர் முன்னணியின் அங்கத்தினர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அதனையடுத்து குறிப்பிட்ட இ. தொ. கா அங்கத்தினர்களின் வீடுகள் (லயன்கள்) சேதமாக்கப்பட்டன.

இச்சம்பவங்கள் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் நடைபெற்றதால் தேர்தல் பிரசாரங்கள் திசைதிரும்பின.

இ. தொ. கா அப்பாவி தொழிலாளியை கொலை செய்து விட்டது என்று மலையக மக்கள் முன்னணி, அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்பனவற்றின் கூட்டினால் அமைக்கப்பட்டன. சந்திரசேகரன் தலைமையிலான சுயேட்சைக் குழு குற்றம் சாட்டியது. மறுபுறத்தில் சுயேட்சைக்குழுவினர் காடைத்தனம் புரிந்து விட்டதாக இ: தொ. கா குற்றம் சாட்டியது.

கையிழந்த தொழிலாளி நொண்டியானார். உயிரிழந்த தொழிலாளி கொள்கைக்காக உயிரிழந்த வீரத்தியாகி எனப் போற்றப்பட்டார்.

இதற்குப் புறம்பாக இராகலை கணிக்கா தோட்டத்தில் பொ. ஜ. ஐ. முன்னணிக்கு ஆதரவாக வேலை செய்த ஒரு தொழிலாளி இ.தொ.காவினால் தாக்கப்பட்டார். நானுஓயாவிலும் பொ. ஜ. ஐ. முன்னணிக்கு ஆதரவளித்த தொ. தே. சங்க தொழிலாளி ஒருவர் வெட்டுக் காயங்களுக்குட்பட்டார். பூண்டுலோயா, நாவலப்பிட்டி, மாத்தளை, கண்டி, பதுளை ஆகிய இடங்களிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கிடையே (தேர்தலில் ஆதரவளிக்கும் குழுக்களின் நலன்களுக்காக) மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

தேர்தலுக்காக தோட்டத் தொழிலாளிகள் மத்தியில் 'வீரத் தியாகிகள்' உருவாக்கப்பட்டுள்ளனர். வீரவணக்கங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அந்தளவுக்குத் தேர்தலை 'வித்தியாசமாக' நடத்த தொழிற் சங்கங்கள் உதவியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரிப்பதற்கல்ல சிந்திப்பதற்கு

அண்மையில் மாதகல்- பண்டத்தரிப்புப் பக்கத்தில் இராணுவம் தனது வழமையான தரிப்பிடத்தில் இருந்து முன்னுக்கு வந்து ஒருநாளில் சிறு மோதலுக்குப் பின் திரும்பி விட்டது. இது நடைபெற்ற அடுத்த நாள் யாழ். நகரத்தை அண்டிய கொட்டடிப் பகுதியில் நடுச்சாம வேளையில் ஒரு வீட்டில் ஒரு பெண் ஒருவருக்கு கடும் நோய் ஏற்பட்டது. அப்பெண்ணை மருத்துமனைக்கு கூட்டிச் சென்றார்கள். இச் செய்தியை அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பக்கத்து வீட்டிலிருந்த ஒருவருக்கு அழுகைக் குரலுடன் எடுத்துச் சொன்னார்.

''ஐயோ மாமி, ஐயோ மாமி'' என்று கூப்பிட்டு நோய் வாய்ப்பட்ட செய்தியை அவர் கூறினார். இதனை அரைகுறையாகச் செவிமடுத்த அடுத்த வீட்டுக்காரர்கள் ''ஐயோ ஆமி, ஐயோ ஆமி என்பதாக விளங்கிக் கொண்டனர். இவர்களது தவறான ஊகத்திற்கு ஆதரம் இருப்பது போன்று ஒரு ஹெலிக் கொப்டரும் சிறிது நேரத்திற்கு முன் அப்பகுதியை நோட்டம் விட்டுச் சென்றிருக்கிறது. எனவே ஐயோ மாமி என்பது ஐயோ ஆமி என்பதாக அயலவர்களுக்குப் பரப்பப்பட்டதுடன் ''ஆமி வந்திட்டான் என்பதாக வியாபித்துக் கொண்டது. வழமை போலக் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு கொட்டடி நாவாந்துரைப் பகுதிகளில் உள்ள மக்கள் மானிப்பாய் வீதியால் வேகமாக நடக்கத் தொடங்கினர். இச் செய்தி மேலும் பரவுவதற்கு முன் பொழுது விடிந்து கொண்டது. காலையில் உரிய இடத்திற்குச் சென்று பார்த்து விசாரித்த போது அப்பகுதிக்கு ஆமி எதுவும் வரவில்லை என்பது தெளிவாகியது. அதன் பின்பே ''ஐயோ மாமி'' என்பது ''ஐயோ ஆமி''யாக மாறிய கதை வெளியே வந்தது. மேற்படி சம்பவம் சிலருக்கு சிரிப்பாகலாம். ஆனால் அமைதியாக உறங்க வேண்டிய மக்கள் எவ்வாறு நித்திரையிலும் பயப்பிராந்தியுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் இது அவர்களது அன்றாட வாழ்வின் உள, உடல் நலன்களை ஊடறுத்துத் தீங்கு விளைவித்து வருகின்றது.

## சாதிகள் இல்லை என்பது இல்லை

மலையகத்தில் தேர்தல் பிரசாரங்கள் வழமையை விட வித்தியாசமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. கட்அவுட், போஸ்டர்கள், சாராயம் உட்பட சகல மலினப்படுத்தப்பட்ட வித்தைகளும் காட்டப்பட்டன. மலையகத்தில் 'சாதி' முரண்பாடுகளை வளர்த்து மோதவிடும் அளவிற்குத் தேர்தலின் போது சாதி வேற்றுமைகள் நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை முக்குலத்தோர் சங்கம் சங்க உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்து எழுதியதாகக் கடிதம் ஒன்று விநியோகிக்கப்பட்டு இருந்தது.

அதில் முக்குலத்தோர் யாவரும் இ. தொ. கா உறுப்பினர்களுக்கு வாக்களிக்க வேண்டுமென்றும் நாட்காலிக்கு வாக்களிப்பது பறையர், பள்ளருக்கு வெற்றியாகும். பறையர், பள்ளரைத் தோற்கடிக்க முக்குலத்தோர் உழைக்க வேண்டுமென்றும் கேட்கப் பட்டு இருந்தது. அத்துடன் பறையர், பள்ளர்களின் (தொழிலாளர்கள்) வாக்குகளை முக்குலத்தோருக்குத் திருப்ப வேண்டிய மட்டும் சாராயத்தைக் கொடுக்கும்படி கேட்கப்பட்டு இருந்தது. இக்கடிதப் பிரதிகள் முக்குலத்தோர் என்று சொல்லப்படுவர்கள் அனைவருக்கும் கிடைக்கவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியின் தமிழ் வேட்பாளர்களை சாதி ரீதியாக நிந்தித்து எழுதப்பட்டிருக்கும் கடிதம் அவர்களின் கைகளுக்கோ, ஆதரவாளர்களுக்கோ கிடைத்ததாகத் தெரியவில்லை.

மாறாக நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட சுயேட்சைக் குழுவினரிடமே பரவலாகக் அக் கடிதப்பிரதிகள் காணப்பட்டன. அத்துடன் அக் கடிதங்களைக் காட்டி குறைந்த சாதியினர் எனப்படுபவர்களின் வாக்குகளைப் பெறக்கூடுதலான பிரசார நடவடிக்கைகளைச் செய்தனர்.

அதாவது பறையர், பள்ளரை இ.தொ.கா குறைத்து மதிப்பிடுகிறது என்று குற்றங்காட்டி பெரும்பாலான தொழிலாளர்களின் வாக்குகளைப் பெறமுடியும் என்று சுயேட்சைக் குழுவினர் நம்பினர்.

அதேவேளை முக்குலத்தோர் சங்கம் அவ்வாறான கடிதம் ஒன்றை அச்சங்க அங்கத்தினர்களுக்கு விநியோகிக்கவில்லை என்று மறுத்துள்ளது. அக்கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளதாக தென்படுபவர் அது பற்றி பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளார். அம்முறைப்பாட்டை அடுத்து அக்கறைப்பத்தனைப் பொலிசார் அக்கடிதத்தை எழுதியதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரைக் கைது செய்துள்ளதாக அறிய முடிகின்றன்றது அவர் முக்குலத்தோரும் இல்லை. இ.தொ.கா அங்கத்தினரும் இல்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியின் அங்கத்தினரோ, ஆதரவினரோ இல்லை என்று தெரிய வந்துள்ளது.

சாதியைப் பயன்படுத்தி வாக்குக் கேட்பதில் சாதி முறையை எதிர்ப்பதாக காட்டிக் கொள்பவர்கள் சாதி வாதிகளாக வெளிப்படுபவர்களை விடப் பயங்கரமானவர்களாகவே தெரிகின்றனர்.

சாதியைப் பயன்படுத்தி ஓட்டுக் கேட்பது ஒருவிதம். சாதியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு ஓட்டுப் போடாமல் தடுப்பது இன்னொரு விதம். மலையக தனித்துவ தேசியம் பற்றி சிந்திப்பவர்கள் யாவரும் வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

## தமிழ் மக்களின்.....

முடியும். தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.

அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து காலந்தாழ்த்தாது தீர்வுத்திட்டம் பற்றி விரைவாக தீர்மானிக்க வேண்டும். புதிய அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நியாயமான அளவிற் பூர்த்தி செய்யக்கூடியவாறு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதன் மூலமே 'தனிநாட்டு' கோரிக்கைக்குப் பதிலாக மாற்று யோசனையை புலிகள் இயக்கத்தாலே முன்வைக்க முடியும்.

பாரம்பரிய தாயகக் கோட்பாடு போன்ற இனத்துவ சொற்களை கண்டு திகிலடையாமல் அவற்றைப் பற்றி பெரியவாதப் பிரதிவாதங்களை செய்யாமல் நடைமுறையில் செய்யப்பட வேண்டியவற்றைப் பற்றி கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெறுவது பற்றியும், தீர்வு திட்டத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமை பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமேயாகும்.

அவற்றை அடைவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதிலும் அக்கறை செலுத்த வேண்டும். அச்சூழ்நிலையை ஏற்படுத்தும்வரை பேச்சுவார்த்தைகள் என்று இழுத்தடிக்காமல், அல்லது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாது ஒன்றும் செய்ய முடியாது என்று சும்மா இருந்துவிடாமல், அல்லது தீர்வுத் திட்டமொன்றை ஏற்படுத்திவிட்டு நிறைவேற்ற பெரும்பான்மை இல்லை என்று அசட்டையாக இருந்துவிடாமல் வடக்கு கிழக்கில் சுமூக சூழ்நிலையை கொண்டுவர அரசாங்கம் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதாவது தற்போதைய அரசியல் அமைப்பு - மாற்றப்படும்வரை நடைமுறையில் இருக்கக் கூடிய மாகாணசபை நிர்வாகத்தை வடக்கு கிழக்கில் நடைமுறைப்படுத்தலாம். அதனடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையில் ஒரு இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தல் வேண்டும். அதன் மூலம் வடக்கு கிழக்கில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் நிலைநாட்ட முடியும்.

இடைக்கால நிர்வாகம் நடைபெறும் அதேவேளை அரசியல் தீர்வு திட்டமொன்றில் உடன்பாட்டை கண்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஏனைய தமிழ் கட்சிகள், அமைப்புக்கள், என்பவற்றுடன் உடன்பாடு காணப்படவும் வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரசாங்கமும், விடுதலைப்புலிகள் உட்பட தமிழர் அமைப்புகளும் இணைந்து ஏற்படுத்தும் தீர்வுத் திட்டத்தில் இந்தியாவின் செல்வாக்கு எப்படி இருக்க வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்பதை இலங்கை ஏற்றுக் கொண்டதில் இந்தியாவின் பங்கை குறைத்து மதிப்பிட முடியாது. இருப்பினும் தமிழர் இயக்கங்களிடையேயான மோதல் 'இந்திய' அமைதிப் படையினர் தமிழ் மக்கள் மீது புரிந்த அட்டூழியங்கள் போன்ற தமிழ் மக்களுக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு மீண்டும் ஏற்படாது தடுக்கப்பட வேண்டும். அதேபோன்று இலங்கை அரசாங்கமோ, தமிழர் அமைப்புகளோ இந்திய விஸ்தரிப்புவாத அக்கறைக்கு அடிபணிந்து எதனையும் செய்யும் நிர்ப்பந்தம் இருக்கக் கூடாது. அப்படியான நிலைமை ஏற்படின் இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு ஏற்பட மாட்டாது.

பலவிதமான காரணிகளினால் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் இந்தியாவின் அக்கறையை முற்றாக நிராகரித்துவிட முடியாது. எனினும் அந்த அக்கறைகளினால் இலங்கை தேசத்துக்கோ, குறிப்பாக தமிழ் மக்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படலாகாது.

புதிய பிரதமரிடம் உறவை நன்கு வளர்த்துக் கொள்வதில் இந்தியா மிகவும் வேகமாக செயற்படுகின்றது. இந்திய பிரதமர் நரசிம்மராவோ புதிய பிரதமருக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பியது மட்டுமன்றி ஒரு தூதுக்குழுவினரூடாக அவரது விசேட செய்தியையும் புதிய பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார். இதனால் ஈர்க்கப்பட்டு இலங்கை அரசாங்கம் இந்திய அக்கறைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முற்படக்கூடாது.

புதிய அரசாங்கமும் புலிகள் இயக்கம் உட்பட சகல தமிழ் அமைப்புகளும் நேர்மையாக தீர்வு காண முற்பட்டால் தீர்வு நடவடிக்கைகளில் இந்தியாவின் அக்கறை மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

ஏனெனில் சில தமிழர் அமைப்புகள் கூறுவது போல் 'இலங்கைத் தமிழ் மக்களின் நண்பனாக இந்தியா செயற்படவில்லை' என்பதால் இந்தியாவின் எந்தவிதமான பங்களிப்பையும் முதலில் தமிழ் மக்கள் சந்தேகத்துடனேயே அணுகுவர்.

இந்தியாவின் தேசியநலன்களுக்கு எதிராக இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒருபோதும் அமையப்போவதில்லை. அதனால் இந்தியாவின் அளவுக்கு மீறிய அக்கறைக்கு குறிப்பாக அதனது பிராந்திய மேலாதிக்கத்திற்கோ விஸ்தரிப்பிற்கோ இலங்கை அரசாங்கமோ, தமிழ் மக்களோ இரையாக முடியாது.

இறுதியாக சிங்கள் பேரினவாதிகளை எவ்வாறு முறியடித்து உத்தேச தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பதிலும் புதிய அரசாங்கம் தீர்க்கமாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

www.padippakam.com

புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYAPOOMI
පුදිය පූමි

## ஜனாதிபதி தேர்தலில்:

# சிறிமா போட்டியிடமாட்டார்?

ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிட மாட்டார் என்றே தெரியவருகிறது. பொ.ஜ.ஐ. முன்னணியின் சார்பில் அவரே போட்டியிடுவார் என்று முன்பு ஏகமனதாக முடிவாகியிருந்தது தெரிந்ததே.

எனினும் அவரின் உடல்நிலை சீராகஇல்லாதபடியால் அவரால் தேர்தல் பிரசார வேலைகளை தீவிரமாக முன்னெடுக்க முடியாது. பொதுத்தேர்தலில் பிரசார நடவடிக்கைகளில் கூட உடல் நிலை காரணமாக அவரால் ஈடுபடமுடியவில்லை. இறுதியாக நடைபெற்ற சில கூட்டங்களில் அவர் பேச விருப்பம் கொண்டிருந்தபோதும் உடல் நிலை இடம் கொடுக்கவில்லை.

அவரின் உடல்நிலை சீரில்லாத படியாலேயே அவரின் விருப்பத்தின் பேரிலேயே அவருக்கு இலாக்கா இல்லாத அமைச்சர் பதவி வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றி கிடைத்திருந்தால், ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல், ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கான சட்ட மூலத்தை நிறைவேற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியினர் எண்ணம் கொண்டிருந்தனர்.

பொதுஜனஐக்கிய முன்னணிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் பாராளுமன்றத்தில் இல்லாத படியால் சகல சிறுபான்மையின கட்சிகளின் ஆதரவு கிடைத்தாலும் மூன்றில் இரண்டு ஆதரவு இருக்காது. மூன்றில் இரண்டு ஆதரவை பெற மொத்தமாக 150 ஆசனங்கள் தேவை.

அதேவேளை ஜனாதிபதிமுறைமையை மாற்றியமைப்பதற்காக அல்லது இல்லாது செய்வதற்கான சட்ட மூலத்தை பொ.ஜ.ஐ.முன்னணி கொண்டு வந்தால் யூ.என்.பி யைச் சேர்ந்த எம்பிக்களும் அதனை ஆதரிப்பர் என்று எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

யூ.என்.பியின் அதிகமான எம்பிக்களும் ஜனாதிபதி முறையை விரும்பவில்லை. எனவே பெரும் செலவை ஏற்படுத்தும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாது, ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான அல்லது மாற்றுவதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றுவதே சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

அவரின் உள்நோக்கம் எதுவாக இருந்தபோதும் அதனை பொ.ஜ.ஐ.முன்னணி ஏற்றுக் கொண்டு அதற்கான சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலை இருப்பதாக தெரியவில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குவதற்கு ஆதரவளிக்க சிறுபான்மையின கட்சிகள் தயக்கம் காட்டுகின்றன. (முஸ்லிம் காங்கிரஸ் கூட) ஜனாதிபதி முறையில் நாட்டின்தலைவரை தெரிவு செய்வதில் சிறுபான்மையினரின் பங்களிப்பும் நேரடியாக தேவைப்படுகிறது. அதனால் சிறுபான்மையினங்களின் உரிமைகளை நிலைநாட்ட ஜனாதிபதி கடப்பாடுடையவராக இருக்கிறார். சிறுபான்மையின கட்சிகளும் கோரிக்கை விட பிடியொன்றிருக்கிறது. ஜனாதிபதி முறை நீக்கப்பட்டால் நாட்டின் தலைவரான பிரதமரை தெரிவு செய்ய சிறுபான்மையினரின் பங்களிப்பு நேரடியாக அவசியமில்லை. அதனால் சிறுபான்மையினர் சார்பில் அத்தலைவர்களிடம் விடுக்கும் கோரிக்கை வலுவானதாக இராது என்று சிறுபான்மையினக் கட்சிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி முறையை மாற்றும் அதேவேளை சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளை கொண்டு வந்தால் சில சிறுபான்மையின கட்சிகள் ஆதரவளிக்கலாம். அந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அரசியலமைப்பில் எவ்வாறு இடம் பெற வேண்டும் என்பது பற்றி ஆராய கால அவகாசம் போதாது. நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்பதாக அவ்வேற்பாடுகளை கொண்ட அரசியலமைப்பு திருத்தத்தைக் கொண்டுவர முடியாது.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவும், எதிர்க்கட்சித்தலைவர் காமினி திஸநாயக்காவும் ஜனாதிபதி முறையை நீக்க ஆதரவு தெரிவித்திருந்த போதும் காமினி எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட பிறகு யூ. என். பிக்குள் ரணில் விக்கிரமசிங்ஹவின் தலைமையில் ஒரு பிரிவு பிளவுபட்டிருப்பதால் எல்லா யூ. என்.பி எம்பிக்களும் ஆதரவளிப்பர் என்று கூறமுடியாது. அதனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காது போகலாம்.

இச்சூழ்நிலைகளின் அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுஜனஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற கேள்வி எழும்பியுள்ளது. ஜனாதிபதி தேர்தல் பற்றி பொ. ஜ. ஐ. முன்னணி வட்டாரங்கள் கருத்து தெரிவிக்கையில் தாங்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராகிவிட்டதாக தெரிவித்துள்ளனர். ஆனால் அபேட்சகர் யார் என்று திட்டவட்டமாகக் கூறுவதில் தயக்கம் காட்டுவதாகவே தெரிகின்றது.

எனினும் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உடல்நிலை சீரில்லாத காரணத்தினால் அவர் போட்டியிட மாட்டார் என்றே தெரிகிறது. அத்துடன் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவிற்கு நாட்டின் சகல சமூகத்தினரும் சகல மட்டத்தினரிடையிலும் ஆதரவு பெருகி வருவதால் அவரே ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிடலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றி பெற்று ஜனாதிபதி முறை மாற்றியமைக்கப்பட்டால் திருமதி. சிறிமா பண்டாரநாயக்கா சம்பிரதாயபூர்வமான ஜனாதிபதியாக நியமிக்கப்படலாம். திருமதி சந்திரிகா மீண்டும் பிரதமராக பதவியேற்பார்.

யூ.என்.பியின் ஜனாதிபதி அபேட்சகர் யார் என்பதும் இப்போது கேள்வியாக இருக்கின்றது. பொதுத்தேர்தலில் யூ.என்.பிக்கு தோல்வி ஏற்பட்டால் தான் இராஜினாமாச் செய்யப்போவதாகவும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க முன்பு தெரிவித்திருந்தது தெரிந்ததே.

ஆனால் தற்போது யூ.என்.பி காமினியுடனும், ரணிலுடனும் இரண்டாக பிளவுபட்டிருப்பதால் ஏகமனதாக ஒரு ஜனாதிபதி வேட்பாளரை யூ.என்.பிக்கு தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்படலாம். ○

# கிழக்கு தந்த பாடங்கள்

சட்டத்தரணி யூ.எம்.நிசார்

திருகோணமலை மாவட்டத்தில் 34986 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 76516 வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களையும் த.வி. கூட்டணி பெற்றது. தேசியப் பட்டியலில் ஒரு ஆசனத்தையும் பெற்றது. எல்லாமாக 5 ஆசனங்களைத் த.வி. கூட்டணி பெற்றது.

டெலோ, புளொட், ஈரோஸ் என்பவற்றின் தமிழர் தேசிய முன்னணி கிழக்கு மாகாணத்தில் ஒரு ஆசனத்தையும் பெறவில்லை ஈ. பி. ஆர். எல். எப்பும் ஒரு ஆசனத்தையும் பெறவில்லை.

தமிழர் கட்சிகள் தனித்தனியே பிரிந்து நின்றமையாலும் ஆயுத மேந்திய கட்சிகளின் பிழையான அணுகு முறையாலும் கிழக்கு மாகாணத்தில் தமிழர் கட்சிகள் உரிய பிரதிநிதித்துவத்தைப் பெறவில்லை.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அஷ்ரப்-சந்திரிகா கூட்டில் கவரப்பட்டு முஸ்லிம் காங்கிரஸிற்கு வாக்களித்துள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அடுத்தபடியாக கிழக்கில் தமிழ் மக்கள் பொதுஜனஐக்கிய முன்னணிக்கு குறிப்பிடத்தக்களவு ஆதரவு வழங்கியுள்ளனர். பொ.ஐ. முனணி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று அளித்த வாக்குறுதியினால் கவரப்பட்ட தமிழ் மக்கள் பொ. ஐ.முன்னணிக்கு கூடிய ஆதரவு வழங்கியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 19278 வாக்குகளும், அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டத்தில் 10000 வாக்குகளும் கிடைத்துள்ளன. இதனாலும் தமிழ் கட்சிகளுக்குப் பலம் குறைந்தது எனலாம்.

கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸ் பலமான கட்சியாக தெரிவதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன.

1. அஷ்ரப்- சந்திரிகா உடன்படிக்கையின் அடிப்படையில் முஸ்லிம் வாக்குகள் பிரிவடையாமல் முஸ்லிம் காங்கிரஸிற்கே கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது.

2. பதினேழு வருட காலமாகப் உளுத்துப் போன ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் தலைவர்களுக்கு மாறாக புதிய தலைமையை முஸ்லிம்கள் தேடினர்.

அத்துடன் இன்னொரு உண்மையையும் மறக்க முடியாது. அதாவது கிழக்கிலும் வன்னியிலும் முஸ்லிம் காங்கிரசும் பொ.ஜ.ஐ. முன்னணியும் நேரடி மோதலில் ஈடுபட்டிருந்ததால் திகாமடுல்ல மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற ஒரு ஆசனத்தையும் மட்டக்களப்பில் பெற்ற ஆசனத்தையும் இழந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

வாக்குறுதி அளித்தபடி முஸ்லிம் காங்கிரஸ் 5 லட்சம் வாக்குகளை பொ. ஜ. ஐ. முன்னணிக்குப் பெற்றுக் கொடுத்ததா? என்பது கேள்விக்குறியே.

நடந்த பொதுத் தேர்தல் கிழக்கு மாகாண தமிழ் முஸ்லிம் மக்களுக்கு இரு படிப்பினைகளை ஊட்டியுள்ளன.

1. முஸ்லிம் காங்கிரஸ் தனது பிரதிநிதித்துவத்தைக் காக்க ஐ.தே.கட்சியுடன் அல்லது சுதந்திரக் கட்சியுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

2. தமிழ் கட்சியினர் குழுக்களாகப் பிரிந்து போகாமல் ஒற்றுமையாக ஒரு கூட்டு அமைப்பாக போட்டியிட்டால் மாத்திரமே தமிழர்கள் போதிய பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

த.வி.கூட்டணி, மு.காங்கிரஸ் யூ.என்.பி என்பன தமக்கு வாக்களித்த கிழக்கு மக்களின் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு சிறப்பாக மேற்கொள்ளும் என்பதிலேயே அவற்றின் எதிர்காலம் தங்கியுள்ளது. ○

## விளம்பரங்கள்

புதியபூமிக்கு விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

| | | |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா | 6000/- |
| 1/2 பக்கம் | ரூபா | 3500/- |
| 1/4 பக்கம் | ரூபா | 2000/- |
| 1/8 பக்கம் | ரூபா | 1250/- |

தொடர்பு முகவரி:
S.47,3rd Floor,
Colombo Central SuperMarket Complex
Colombo - 11.

படிப்பகம்